Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 02 திங்கட்கிழமை (18.07.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 211

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# அரசினதும் படைகளினதும் செயற்பாடே புலிகளின் நிலைப்பாட்டை தீர்மானிக்கும்!

## சு.ப. தமிழ்ச்செல்வன் அறிவிப்பு

(கிளிநொச்சி)



விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல்களை இனியும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவே அடுத்தகட்ட நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அரசினதும் படையினரதும் தீர்மானத்தின் அடிப்படையிலேயே இனி வரும் காலங்களில் எமது தீர்மானங்கள் அமையும். படைத்தரப்பினரால் யுத்தம் திணிக்கப்பட்டால் அதனை எதிர்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்படும் என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார் சைக்கிள் விபத்து இளைஞன் ஸ்தலத்தில் பலி

### காரைநகரில் நேற்றுச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதியதில் இளைஞன் ஒருவர் ஸ்தலத்தில் பலியானார். இச் சம்பவம் நேற்று மாலை 2 மணிக்கு காரைநகர் தெருவடிப் பிள்ளையார் கோவிலடியில் இடம்பெற்றது.

தனது நண்பர் ஒருவரை ஏற்றிக்கொண்டு மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்ற பிரஸ்தாப இளைஞனின் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரம் ஒன்றுடன் மோதியது. இதனால் அவர் தலையில் படுகாயமடைந்து சம்பவ இடத்தில் உயிரிழந்தார். அவருடன் சென்றவர் எவ்வித காயமும் இன்றி தப்பினார். இவ் விபத்தின்போது காரைநகர் புதுத் தோட்டத்தைச் சேர்ந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுவார்த்தையின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது

### இரா. சம்பந்தன் கவலை

(கிளிநொச்சி)

நன்னிலங்கை அரசியல் நிலைமை ...ால் சமாதான பேச்சுக்களின் அடிப்படை ...ல் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கையை நாம் இழந்துவிட்டோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

கடந்த மூன்றரை வருடங்களாக யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதன் பிறகு அரசியல் ரீதியாக எவ்விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இடைக்கால நிர்வாகம், பொதுக்கட்டமைப்பு யாவும் முடக்கப்பட்டு ஒருவிதமான முன்னேற்றமும் உருவாகவில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)



## ஐ.ம.சு.கூ.க்கு புதிய செயலாளர்


ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் புதிய செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

கூட்டமைபிலிருந்து ஜே.வி.பி. வெளியேறிய பின்னர் கூட்டமைப்பின் பலம் குறைந்துள்ளது. இதனால் கூட்டமைப்பின் செயலாளராக இதுவரை காலமும் பதவி வகித்த சுசில் பிரேம் ஜெயந்த அப் பதவியிலிருந்து விலக்கப்படவுள்ளார். அவரின் இடத்திற்கே விஜயதாஸ ராஜபக்ஷ நியமிக்கப்படவுள்ளார்.

இது குறித்து அரசாங்கம் உத்தியோக பூர்வ அறிவித்தல் எதனையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-08)

தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கையை நாம் இழந்துவிட்டோம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகம், பொதுக்கட்டமைப்பு யாவும் முடக்கப்பட்டு ஒருவிதமான முன்னேற்றமும் உருவாகவில்லை. (12 ஆம் பக்கம் பார்க்க)



ளார்.

இது குறித்து அரசாங்கம் உத்தியோக பூர்வ அறிவித்தல் எதனையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-08)

# மன்னார் கடலில் படகிலிருந்து சக்திவாய்ந்த கிளைமோர் மீட்பு

(மன்னார்)

மன்னார்க் கரையோர பிரதேசத்தில் அதிசக்திவாய்ந்த கிளைமோர் குண்டுகள் சிலவற்றை பொலிஸார் நேற்றுக் கைப்பற்றியுள்ளனர். இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

நேற்றுப் பொலிஸாருக்குக் கிடைத்த ரகசியத் தகவல் ஒன்றினையடுத்து மன்னார்ப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பள்ளிமுனைப் பகுதியில் பொலிஸார் சென்றபோது படகுகள் இரண்டில் கொண்டுசெல்வதற்காக முச்சக்கரவண்டி (12 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வே சமாதானக் குழுவினர் அடுத்த வாரம் இலங்கை வருகை

(கொழும்பு)

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றஸன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் ஆகியோர் அடுத்த வாரம் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளனர். இவர்கள் தமது விஜயத்தின்போது அரச மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்கள்.

திருகோணமலையில் விடுதலைப் புலிகள் மீது நடத்தப்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு விடயத்தில்

# உயர் நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் புலிகளின் நிலைப்பாடு அறிய அரசு ஆவல்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு குறித்து கடந்த வெள்ளியன்று நீதிமன்றத்தின் தீர்ப்புக் குறித்த புலிகளின் பதிலுக்கு காத்திருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

புலிகள் தற்போதுள்ள உடன்படிக்கையின் பிரகாரம் தொடர்ந்தும் செயற்படத் தயாராகும் என நாம் காத்திருக்கின்றோம் என அமைச்சர் டி.யூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் மேல் நீதிமன்றத் தீர்ப்பினால் பாதிக்கப்படாத பொதுக்கட்டமைப்பு சரத்தை தொடர்ந்து அமுல்படுத்த அரசாங்கம் தயாராகவுள்ளது. அது புலிகளின் பதிலிலேயே தங்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.

மாவட்டக் குழுக்கள் அமைக்கும் விவகாரத்தில் நீதிமன்றத் தீர்ப்பு எத்தகைய பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

இது உட்பட்ட ஏனைய திட்டங்களை தொடர்ந்து அமுல்படுத்த புலிகளின் அங்கீகாரம் தேவை என்றும் அவர் கூறினார்.

இதேவேளை நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றஸன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனும் அடுத்த வாரம் கொழும்புக்கு வரவுள்ளனர். அப்போது பொதுக்கட்டமைப்பின் நீதிமன்ற தீர்ப்பு பற்றிய விடயங்கள் பேசப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-6)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-234999
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com,reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# யாழ்.மாவட்ட ஊடகவியலாளரின் திறனை வளர்ப்பதே ஊடகவளம் மற்றும் பயிற்சி நிலையத்தின் முதன்மை நோக்கம்

## அதன் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

*யாழில் உள்ள ஊடகவளம் மற்றும் பயிற்சி நிலையத்தின் செயற்பாடுகள் குறித்து அதன் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களால் வெளியிடப்பட்ட விளக்க அறிக்கை இங்கு பிரசுரிக்கப்படுகிறது. (ஆ-ர்)*

மூனறு ஆண்டுகளுக்கு முன்னர் (2002 இல்) டென்மார்க் அரசு அதன் கிளை நிறுவனம் டனிடா ஊடாகவும் யுனெஸ்கோ நிறுவனம் ஊடாகவும் இலங்கை அரசுடன் செய்துகொண்ட ஓர் ஒப்பந்தத்தின் படி யாழ்ப்பாணத்திலுள்ள பணிசெய் ஊடகவியலாளர்களுடைய திறன்களை வளர்க்கவும் அவர்களுடைய அறிவு விருத்தியினால் சனநாயகமும் நல்ல அரசமைப்பும் முன்னேற்றமடைய வாய்ப்புண்டு என்பதனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுசரணையுடன் ஊடகவளம் மற்றும் பயிற்சி நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டது.

இந்நிலையம் அமையும் கட்டடம் திருத்தப்படவும் தேவையான வளங்களைப் பெறவும் சிறிது காலம் சென்றது. 2003 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்தே அது இயங்கத் தொடங்கியது. பணிசெய் ஊடகவியலாளருக்கே இந்நிலையத்தினுடைய பயன் சென்றடைய வேண்டுமென்பது நிதி வழங்குபவருடைய எதிர்பார்ப்பாகும். இந்த இலக்கினை அடிப்படையாகக் கொண்டு ஊடகவளம் மற்றும் பயிற்சி நிலையம் தன்னுடைய பணியினைத் தொடங்கியது. பல பணியவைகள் (பட்டறைகள்), கருத்தரங்குகள், விரிவுரைகள் ஆகியன நடத்தப்பட்டன. ஊடகவியலாளர் தாம் இவையூடாகப் பெரும் பயன்பெற்றதாகக் கூறியுள்ளனர்.

ஒப்பந்தத்தின்படி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுசரணையுடன் இதழியல் டிப்ளோமாக் கற்கை நெறியினைத் தொடங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. உடனடியாக முழுநேர ஓராண்டு டிப்ளோமா வகுப்பினைத் தொடங்குவதறகு நிரந்தர புலமைசார் ஆளணி இன்மையால் ஈராண்டு பகுதிநேர டிப்ளோமா வகுப்பினைத் தொடங்குவதற்கு மூதவை ஒப்புதல் வழங்கியது.

இருபது பணிசெய் ஊடகவியலாளர் மாணவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களுடைய கற்கை தமிழ்மொழி மூலமாகவே நடைபெறுகின்றது.

இதனால் தமிழ்மொழியூடாக இம் மாணவர்களைப் பயிற்றுதற்குரிய வள ஆளணியினரை இனங்கண்டு அவர்களைப் பயன்படுத்துவது மிகவும் சுமையான பணியாக இருந்தது. எங்களுடைய நாட்டில் ஒரு சிலரே தமிழ்மொழியூடாகக் கற்பிக்கக் கூடியவர்களாக உள்ளனர். இதனாலேயே தமிழ் நாட்டிலிருந்து வள அறிஞர்களைப் பெற வேண்டிய ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டது. இதற்குப் பெருந்தொகையான பணம் தேவைப்படும் என அறிந்திருந்தும் யுனெஸ்கோ இதற்கு ஒப்புதல் வழங்கியது.

பணிசெய் ஊடகவியலாளர் மிகச் சிறந்த பயனைப் பெறவேண்டும் என்பதே நிதி வழங்குபவருடைய எதிர்பார்ப்பாகும். இக் கற்கைநெறி கலைப்பீடத்தினூடாகவே நடைபெறுகின்றது. எனவே டிப்ளோமாக் கல்விசார் நடவடிக்கைகள் யாவும் கலைப்பீடத்தினூடாக நடைபெற வேண்டுமென்பது இப்பொழுது நன்கு உணரப்பட்டுள்ளது.

ஊடகவளம் மற்றும் பயிற்சி நிலைய நடவடிக்கைகளுக்கு டென்மார்க் அரசு நிதியினை யுனெஸ்கோ ஊடாக வழங்கிவந்தது. அவ்வாறு வழங்கி வந்த முதலாவது கட்டம் யூன் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. இரண்டாவது கட்டம் இம்மாதம் தொடங்குகின்றது. டென்மார்க் அரசு, நிதியினை டென்மார்க் அபிவிருத்திக் கழகத்தினூடாக இனிமேல் வழங்கவுள்ளது. இரண்டாவது கட்டத் திட்டத்தில் வானொலி ஒலிபரப்பு ஆகியவற்றுக்கான கட்டடம் அமைக்கப் படவுள்ளது. இதே கட்டடத்தில் பத்திரிகைக் கழகம் ஒன்றினை




அமைக்கும் நோக்கம் உண்டு. இதற்கான தொடக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஊடகவளம் மற்றும் பயிற்சி நிலையம் யாழ்ப்பாண மாவட்ட ஊடகவியலாளரின் திறனை வளர்ப்பதையே முதன்மை நோக்கமாகக கொண்டுள்ளது. இவை தொடர்பாக இந நிலையம் தனித்துவமாக இயங்கும். நிலையத்தின் எல்லாக் கல்விசார் விடயங்களும் பல்கலைக்கழகச் சட்டத்திட்டங்களுக்கு அமையவே இயங்க முடியும். நிலையத்தின் நிர்வாகப் பணியாளர்களாகிய பணிப்பாளர், பயிற்சி இணைப்பாளர், முகாமையாளர், சாரதி மற்றும் உதவியாளர் ஆகியோர் DADECOவின் பணிப்பின் பேரில் நிலையத்தினால் நியமிக்கப்படுவர். கல்விசார் எல்லாப் பதவிகளுக்குமுரியவர்கள் பல்கலைக்கழக அனுசரணையுடனேயே நியமிக்கப்படுவர்.

யாழ்ப்பாணத்தில் இத்தகைய ஒரு நிறுவனம் அமையப்பெற்றதையிட்டு நாம் மகிழ்வடைகின்ற அதேவேளையில் அதனை முறைப்படி நடாத்தி ஊடகவியலாளர்கள், ஊடகவியல் மாணவர்கள் நலன்களைப் பேணும் இடமாகவும் திறன்களை வளர்க்குமிடமாகவும் ஆக்குதற்கு எல்லோருடைய உதவியினையும் நாம் எதிர்ப்பார்க்கிறோம் என்றுள்ளது. (ந)

## இராசி பலன்

**18.07.2005**

**(ஆடி 2, திங்கட்கிழமை)**

**துவாதசி நள்ளிரவு 12.11 மணிவரை**

**அனுசம் முற்பகல் 7.59 மணிவரை**

**இராகுகாலம் 7.30 - 9.00 மணிவரை**

**சுபநேரம் 12.00 -1.30 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | குடும்பக் கவலை, காரியதாமதம், புதிய சிந்தை, பணக்குறைவு. |
| இடபம் | முயற்சி கைகூடும், குடும்ப சுகம், நல்ல செய்தி, அபூர்வசந்திப்பு. |
| மிதுனம் | உடல்நலம், திடீர்நன்மை, தடைப்பட்ட காரியம் கைகூடும், நல்லசெய்தி. |
| கடகம் | புத்திரரால் கவலை, வேலையில் ஆர்வம், முயற்சி தாமதம், பணக்குறைவு. |
| சிங்கம் | ரோக நிலை, மாதாசுகம், கல்வியில் ஆர்வம், காரியதாமதம். |
| கன்னி | உறவினர் உதவி, பிரயாண நன்மை, பொருள் சேர்க்கை, காரியசித்தி. |
| துலாம் | பண விரயம், முயற்சி தாமதம், மனக் கவலை, போசன சுகக் குறைவு. |
| விருச்சிகம் | சித்தனை மிகுதி, நல்ல முயற்சி, உறவினர் சந்திப்பு, போசன சுகம். |
| தனுசு | கர்ரிய அலைச்சல், வேலையில் ஆர்வம், பண விரயம், வீண் பகை. |
| மகரம் | தெய்வசிந்தை, நல்ல முயற்சி, உறவினர் வருகை, விருந்துபசாரம். |
| கும்பம் | தொழில் மேன்மை, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு, காரிய சித்தி. |
| மீனம் | புதிய சிந்தை, கட்டுப்பாடு, உடல் நலக் குறைவு, பிரயாணம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

\- வளவன்

## முஸ்லிம்களின் விடயங்களில் புலிகள் விட்டுக் கொடுப்புடன் நடக்க வேண்டும்

### அமைச்சர் எம்.எஸ்.அமீர் அலி

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு விடயங்கள் உட்பட அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் முஸ்லிம் மக்களிடத் தில் ஏற்பட்டுள்ள சந்தேகங்கள் களையப்படவேண்டுமானால் தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லிம்களின் விடயங்களில் சில விட்டுக்கொடுப்புகளை மேற்கொள்ள முன்வரவேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். அமீர் அலி தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் அலிகார் தேசியப் பாடசாலையில் கட்டப்படவுள்ள மூன்று மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா பாடசாலை ஆராதனை மண்டபத்தில் நடைபெற்ற போது அவ் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகெண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்று கையில் தெரிவித்ததாவது,

ஐ.தே.முன்னணி அரசு, தமிழீழ விடுதலைப்புலிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலே சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைக் கட்டியெழுப்பும் நோக்கத்தில் இந்தப் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இது இனப் பிரச்சினைக்கான அதிகாரப் பகிர்வு ஒப்பந்தமல்ல. இருப்பினும் முஸ்லிம் மக்கள் மத்தியில் இது தொடர்பாக எழுந்துள்ள சந்தேகங்களைக் களைய தமிழீழ விடுதலைப் புலிகள் விட்டுக் கொடுப்புடன் நடக்கவேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலமே நாம் எதிர்பார்க்கின்ற இலக்கை அடையமுடியும்.

கடல்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் கூடாரங்களில் வெந்துபோயுள்ளனர்.

இந்த நிலையில் சிலர் பொதுக் கட்டமைப்பை வைத்துக் கொண்டு அரசியல் இலாபம் பெற முனைகின்றனர்.

இருப்பினும் நாங்கள் முஸ்லிம் மக்களின் நிலை தொடர்பாக ஜனா திபதியுடன் பேசியுள்ளோம்.

இந்நாட்டில் முஸ்லிம் மக்களும் ஒரு தனி இனம் என்பதை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண இணங்கியுள்ளார்.

எனவே, தற்பொழுது ஏற்படுத் தப்பட்டுள்ள பொதுக் கட்டமைப்பு விடயத்தில் முஸ்லிம்கள் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

ஆனால், அழிந்துபோன முஸ் லிம் பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்கின்ற போது அதனை தமிழீழ விடுதலைப் புலிகள் தடுத்து நிறுத்தி விடுவார் கள் என்ற முஸ்லிம்களின் சந்தே கததினை தமிழீழ விடுதலைப் புலிகளே நீக்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-7)

## மேயரின் இல்லம் மீது கிரனேட் வீச்சு

(கொழும்பு)

தெகிவளை கல்கிசை மாநகர மேயரின் உத்தி யோகபூர்வ இல்லத்தின் மீது கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9.00 மணியளவில் கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும், இந்த கிரனேட் தாக்குதலில் எவருக்கும் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லையெனத் தெரிய வருகிறது.

இச் சம்பவம் இடம்பெற்றவேளை மரநகர மேயர் மாநகரசபை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவம் தொடர்பாக தெகிவளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-8)

## வவுனியாவில் பதற்றம்

திருகோணமலைச் சம்பவங்களை அடுத்து வவுனியாவிலும் பதற்ற நிலைமை காணப்படுகின்றது. விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் போராளிகள் வன்னிக்குச் சென்றுவிட்டனர் எனவும் வதந்திகள் பரப்பப்படுகின்றன.

பெருமளவான மக்கள் உண்மை நிலையினை அறிவதற்கு, அரசியல் துறையினருடன் தொலைபேசியூடாகவும் நேரடியாகவும் தொடர்பு கொண்டு விசாரித்து வருகின்றார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் பதற்ற நிலைமையில் இருக்கின்ற போது படையினர் காவலரண் புனரமைப்பு மற்றும் வீதியோர ரோந்தில் மும்முரமாக ஈடுபட்டு வருவதுடன் ஓமந்தைப் பகுதியில் மோட்டார், துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த நிலைமையினால் மக்களிடையே நிலவும் பதற்றம் மேலும் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-2)

## கட்டடத்திறப்பு விழா

(புங்குடுதீவு)

பாரதி சனசமூக நிலைய புதிய கட்டடத் திறப்பு விழா கடந்த 12 ஆம் திகதி பாரதி சனசமூக நிலையத் தலைவர் கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்வி ஆசிரிய ஆலோசகர் ஜெயநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக சரவணை மேற்குக் கிராம சேவையாளர் பரமேஸ்வரன்,சரவணை நாகேஸ்வரா மகா வித்தியாலய ஆசிரியர் தனேந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

புதிய கட்டட நாடாவை தீவக வலயக் கல்வி ஆசிரிய ஆலோசகர் ஜெயநாயகம் வெட்டி கட்டடத்தை திறந்து வைத்தார். (க-126)


## உடன் விற்பனைக்கு உண்டு

**பின்வரும் பொருட்கள் விற்பனைக்கு உண்டு**


- ஒவ்செற் பிளேற் (பாவித்தது)
- புத்தகம், கொப்பி என்பவற்றிற்கு கிளிப்பிடும் மெசின் (அச்சகங்களுக்குரியது. சிறிய திருத்தம் உண்டு)
- சிறிய ஜெனறேற்றர்(சிறீறாம் கொண்டா 650K)
- ஈய எழுத்துக்கள் வைக்கப்படும் கேஸ் (பலகையினாலானது)
- கோழிக்கூடுகள் மற்றும் கதிரைகளுக்கான பாலைத்தடிகள்
- வெற்றுப் பைவர்கள் (5 லீற்றர்)

**மலிவான விலையில் வழங்கப்படும். பார்வையிடும் நேரம் தினசரி மாலை 4.00 மணிக்குப் பின்னர்.**

தொடர்பு:-
விற்பனை முகாமையாளர்
வலம்புரி
இல 3, 2ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில்)

### பொதுக்கட்டமைப்பு தொடர்பில்

# முஸ்லிம்களின் கருத்துக்கு அரசு கூடிய கவனம் எடுக்க வேண்டும்



(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே சுனாமிப் புனரமைப்புககாக செய்து கொள்ளப்பட்ட பொதுக்கட்டமைப்பு தொடர்பில் முஸ்லிம் மக்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் தொடர்பில் அரசு கூடிய கவனம செலுத்த வேண்டுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை முஸ்லிம் ஊடகவியலாளர் சங்கத்தின் 10ஆவது வருட மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இந்த கருத்துக்களைத் தெரிவித்தார்.

சுனாமி நிவாரணசபை தொடர்பில் முஸ்லிம் மக்கள் மத்தியில் கடந்த காலங்களில் ஒரு தப்பபிப்பிராயம் நிலவி வருகிறது. எனினும் முஸ்லிம் மக்களின் வரலாறறில் ஒருபோதும் நாட்டின் இறைமைக்கும் ஐக்கியத்துக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்வில்லை.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அவர்களின் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு பாரிய அச்சுறுத்தல ஏற்பட்டுள்ளதாக கூறுகின்றார்கள். பொதுக் கட்டமைப்புக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்கின்றனர். பொதுக்கட்டமைப்பு தொடர்பில் அவர்களுக்கு ஒரு குழப்பநிலை காணப்படுகின்றது.

இதனால்தான் போராட்டம், வழக்கு தாக்கல் என எதிரான நடவடிக்கைகள் முஸலிம் தரப்பில் மேற்கொள்ளப்படுகின்றன. பொதுக்கட்டமைப்பு தொடர்பில் அரசாங்கம் முஸ்லிம் மக்களுக்கு நல்ல தொரு முடிவை கொடுக்க வேண்டுமென்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேலும தெரிவித்தார். (ற-8)

# புலிகள் 3000 யுத்த நிறுத்த மீறல்; அரசு மௌனமாயிருப்பது ஏன்?

### போருக்குத் தூண்டுகிறார் ஓமல்பே சோபித தேரர்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தால் மட்டும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் போர் நிறுத்த உடன்படிக்கையின் பெறுமதி என்ன? என ஜாதிக ஹெலஉறுமய கேள்வி எழுப்பியுள்ளது.

இராணுவத்தை முகாம்களுக்குள் அடைத்து வைக்காமல் விடுதலைப் புலிகளுக்கு எதிராக தாக்குதல் நடாத்த அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்.

இராணுவம் போர் நிறுத்தத்திற்கு இனியும பொறுப்பல்ல. விடுதலைப்புலிகள் ஏற்கனவே 3000 யுத்த நிறுத்த மீறல்களை புரிந்துள்ளனர் என ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளா ஓமல்பே சோபித தேரர் கூறியுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

அரசியல் எதிரிகளையும் அப்பாவி மக்களையும் புலிகள் தொடர்ந்தும் கொலை செய்கின்றனர். பொதுக்கட்டமைப்பு தொடர்பாகப் பேசிக்கொண்டு இதனை அவர்கள புரிகின்றனர். கருணா -ஆதரவாளர்கள் கொலை தொடர்பாக கண்காணிப்புக் குழு பதிலளிக்கத் தவறியுள்ளது. கருணா தரப்பினரிடமிருந்து புலிகளைப் பாதுகாக்க வேண்டிய கடமை அரசுக்கு கிடையாது.

நோர்வே அனுசரணையாளர்களினதும கண்காணிப்புக்குழுவினதும் தற்போதைய நிலைப்பாடு என்ன? புலிகளின் தாக்குதல்களில 50ற்கு மேற்பட்ட இராணுவம் தற்போதைய சமாதான காலத்தில் கொல்லப்பட்டுள்ளவேளையில் அரசாங்கம் ஏன் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் எனச் சாடியுள்ளார். (ற-6)

### சமகால நிலவரம் குறித்த விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமகால அரசியல் நிலவரம் தொடர்பாக முக்கிய தீர்மானமெடுக்கும விசேட கலந்துரையாடலொன்று இன்று காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலுக்கு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கல்விசார் நிறுவனங்களின் பிரதிநிதிகள், மற்றும் சமூக, சமய நிறுவனங்களின் பிரதிநிதிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அழைப்புவிடுத்துள்ளது. (ச)

# முறைகேடு முறைப்பாடுகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன

(கொழும்பு)

சுனாமி நிவாரணக் கொடுப்பனவுகள மறறும் வீடுகளை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்திற்கு முறையீடுகள செய்யப்பட்ட 33 பேரின் முறைப்பாடுகளை ஜனாதிபதி செயலக அதிகாரிகள் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளை விசாரிக்கவென வந்த குழுவினர் குறிப்பிட்ட பிரதேச செயலாளர், கிராம சேவையாளர் போன்றவர்களை அழைத்துக் கொண்டு முறையீடு செய்தவரின் வீட்டுக்கு நேரடியாகச் சென்று பாதிப்பு விபரங்களை பார்வையிட்டனர்.

அத்துடன் இவர்களுக்கான நிவாரணத்திற்கு சிபார்சுகளைச் செய்ததுடன் சம்பநதப்பட்ட பிரதேச செயலக அதிகாரிகள தொடர்பாக காரசாரமான உத்தரவுகளையும் இட்டுச் சென்றதாகத் தெரியவருகின்றது. (ற-4)

### வருடாந்த பொதுக்கூட்டம்

(கற்கோவளம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை மு.பகல் 10.30 மணிக்கு சங்க யாழ்.கிளைத் தலைமையகத்தில் யாழ்.கிளைத் தலைவர் வைத்தியக் கலாநிதி வை.தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. (க-104)

# நிவாரண நிதியத்துக்கு நிதியளிப்பதில்லை இந்தியா, சீனா ஆகியவை தீர்மானம்?

(கொழும்பு)

கடற்கோள் அனர்த்த நிவாரண நிதியத்திற்கு நிதி அளிக்க முன்வராத நாடுகள் தாம் வழங்கவுள்ள நிதியினை அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக வழங்குவது பற்றி ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிவாரண நிதியத்திற்கு நிதியளிப்பதில்லையென ஜப்பானும் அமெரிக்காவும் முன்னர் தெரிவித்திருந்தன.

தற்போது இந் நாடுகளுடன் இந்தியா, சீனா ஆகிய நாடுகளும் நிவாரண நிதியத்திற்கு நிதியளிப்பதில்லையென தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இதில் எந்தவித உண்மையும் இல்லையென நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

பொய் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பாதிப்புற்ற மக்களை இன்னும் மனம்நோகச செய்ய வேண்டாமென அமைச்சர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார். (ற-4)

# மனோ தித்தவெல, ஹரீம் பீரிஸ் வவுனியாவுக்கு திடீர் விஜயம்

### புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து ஆராய்வு

(திருகோணமலை)

சுனாமிக்குப் பின்னரான நாட்டைக் கட்டியெழுப்பும் செயலணிக் குழுவின் பணிப்பாளர் மனோ திததவெல, புனர்வாழவு புனரமைப்பு புனர்நிர்மாண அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஹரீம் பீரிஸ் ஆகியோர் நேற்று முன்தினம் வவுனியாவுக்கு திடீர் விஜயம் செய்தனர்.

அவ் விஜயத்தின் போது வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற வடக்கு கிழக்கு மாகாண சகல மாவட்ட அரசாங்க அதிபர்களுடனான கூட்டத்தில் இவர்கள் கலந்துகொண்டு சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் மற்றும புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்துள்ளனர். இதில் விடுதலைப் புலிகளின பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

அத்துடன் இவ்விரு உயர் அதிகாரிகளும் அன்றைய தினம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுககும் விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிந்ததுடன் மாவட்ட அரசாங்க உயர் அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினர். (ற-4)

# அரச ஊழியர்களின் விபரம் திரட்டல்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு சென்று அரச சேவையில் கடமையாற்றிய ஊழியர்களின் பல லட்சம் ரூபா ஓய்வூதியப் பணம் மோசடியான முறையில் பெறப்பட்டிருப்பதாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஒரு மாத காலத்திற்குள் கொழும்பு பிராந்தியத்திற்கு உட்பட்ட பிரதேச செயலகம் ஒன்று 40 இலட்சம் ரூபாவை மோசடியான முறையில் பெற்றுக்கொண்டதாக ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் திலகரத்தின தெரிவிததுள்ளார்.

வெளிநாடுகளில் கடமையாற்றியவர்கள் தொடர்பாக போலி ஆவணங்களை சமர்ப்பித்து ஓய்வூதியம பெறப்பட்டுள்ளது.

இந்த உண்மையான நிலையை கண்டறிவதற்காக வெளிநாட்டில் அரச சேவையில் கடமையாற்றியவர்கள் தொடர்பான உரிய விபரங்களை சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஓய்வு,தியத் திணைக்களப் பணிப்பாளர் மேலும தெரிவித்துள்ளார். (க-9)

# இலங்கை மாலுமியை விடுவிக்க தீவிர முயற்சி

சோமாலியாவில் போராளிகளினால் கடத்தப்பட்ட இலங்கை மாலுமி ஒருவர் உட்பட கப்பல் சிப்பந்திகளை விடுவிப்பதறகு மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையில் பலன் கிடைத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும், இந்தப் பேச்சுவார்த்தை தொடர்பான சில விடயங்களை வெளியிட முடியாதுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

போராளிகளினால் கடத்தப்பட்டுள்ள இலங்கை மாலுமியை விடுவிக்கும் விடயத்தில் கென்யாவிலிருக்கும் இலங்கை தூதரக அதிகாரி ஒருவர் ஈடுபட்டுள்ளார்.

சோமாலியாவில் இலங்கை தூதரகம் இல்லாத காரணத்தினாலேயே கென்யாவில் இருக்கின்ற தூதரகத்தின் மூலம் முயற்சிகள மேற்கொள்ளப்படுவதாக வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த யூன் மாதம் 27ஆம் திகதி 850 மெற்றிக் தொன் உணவு வகைகளுடன் சோமாலியாவிற்கு பயணம் செய்த உலக உணவுத் திட்டத்திற்கு சொந்தமான கப்பலே இவ்வாறு போராளிகளினால கடத்தப்பட்டுள்ளது.

கடத்தப்பட்டவர்களை விடுவிப்பதற்கு 5 லட்சம் அமெரிக்கா டொலர்களை கடத்தல்காரர்கள் கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது. (க-9)

# ஓய்வு பெற இரண்டு மாதங்கள் இருக்கையில் சேவை நிரந்தரம்

(கொழும்பு)

அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்ல 2 மாதங்கள் இருக்கையில, அரச சேவையாளர் ஒருவரின் சேவை நிரநதரமாக்கப்பட்ட விசித்திரமான சம்பவம் ஒன்று நதி நீதித்துறை மறுசீரமைப்பு அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்தின காவலாளியான கதிரவேல் செல்வம் (வயது -58) என்ற முதியவரே தமது 28 வருட கால நீதித்துறை சேவையின் பின்னர் கடந்தவாரம் நீதி அமைச்சர் டபிள்யூ டி.ஜே. செனவிரத்தினாவினால் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டார்.

மிக நீண்டகாலமாக யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற காவலாளியாக கடமையாற்றிய இவர் இடைக்கிடையே உரியவர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் மொழி பெயர்ப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

அரச சேவையாளர் ஒருவர் புதிதாக நியமனம் பெற்ற 3 வருடங்களுக்குள் சேவையில் நிரந்தரமாக்கப்படுவது வழக்கம்.

எனினும், 28 வருடகாலமாக இவர் நிரந்தரமாக்கப்படாமல் இருந்து வந்தார்.

யாழ்ப்பாண நீதிமன்ற கட்டடதொகுதிக்கான அடிக்கல் நடும் வைபவத்திற்கு வருகை தந்திருந்த நீதி அமைச்சர் செனவிரத்தின, பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதி அமைச்சின செயலாளர் சுஹததகே கமல ஆகியோரின் கவனத்திற்கு இவர் தமது அவல நிலையைக கொண்டு வந்ததையடுத்தே இவர் நிரந்தரமாக்கப்பட்டார். (க)

# சேது சமுத்திரத் திட்டத்தின் மூலம் கடற்புலிகளின் பலம் தடுக்கப்படும்

### இந்தியப் பேராசிரியர்

(சென்னை)

கடறபுலிகளின் பலத்தைத் தடுக்கவே இந்திய அரசின் சேதுகால்வாய் திட்டம் செயல்படுத்தப்படுவதாக இந்தியப் பேராசிரியர் வி.சூர்யநாராயணன் தெரிவித்துள்ளார்.

சேதுகால்வாய் திட்டம் இந்தியாவின் இராணுவத்துக்கு வலிமை சேர்க்கும் ஒரு திட்டம். அது கடறபுலிகளின் பலத்தை தடுக்கும் என்றும் கூறினார். இந்நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய இந்திய கடலோர காவற்படை அதிகாரி பரபாகரன் பலேரி பேசுகையல், சேதுகால்வாய் திட்டம் மூலம் இந்திய கடற்படையின் கடலோர காவற் படகுகள் இந்தியக கிழக்குக் கடற் பரப்பிலிருந்து மேற்குக் கடற்பரப்பிற்கு குறுகிய காலத்தில் சென்றடைய முடியும் என்றும் இதற்கு முன்னர் சறிலங்காவைச் சுற்றிச் செல்ல வேணடியிருந்தது என்றும் குறிப்பிட்டார். (ச-4)

# இன்று ஒரு தகவல்

# நிதானம்

"தானத்தில் சிறந்தது எது?" என்று கேள்வியைக்கேட்டு "தானத்தில் சிறந்தது-நிதானம்" என்று அதற்குப் பதில் கூறுபவர்கள் உண்டு. நிதானம் மிகவும் அவசியம். அதுவும் இன்றைய உலகத்திற்கு மிக மிக அவசியம். இன்று உலகம் மிகவும் பரபரப்பாகப் போய்க்கொண்டிருக்கிறது. பொறுமையாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர்களால் கூட அப்படி இருக்க முடிவதில்லை.

பொறுமையைச் சோதிப்பது போல் பல சம்பவங்கள்..! அவற்றையெல்லாம் சந்தித்தே தீரவேண்டியுள்ளது. எங்கே போனாலும் வரிசையில் நிற்க வேண்டியுள்ளது. எங்கே போனாலும் காத்துக்கொண்டிருக்கவேண்டியுள்ளது. அலுவலகத்திலோ, வீட்டிலோ கூட நீங்கள் நிதானமாக, பொறுமையாக நடந்து கொள்ளத் தெரியாவிட்டால் உங்களுக்கு சிடுமூஞ்சி, முசுடு என்றெல்லாம் பெயர் வைத்து விடுவார்கள்! அது உங்களுக்குத் தேவையா?

சரி... வாழ்க்கையில் பொறுமைசாலி என்று பெயர்வாங்குவதற்கு என்ன வழி? முதவாவது. நீங்கள் நினைப்பது. எதிர்பார்ப்பது. செய்வது. எல்லாமே நூறு சதவீதம் சரியாக நடக்க வேண்டும் என்று ஆசைப்படக்கூடாது. எதுவாக இருந்தாலும் அதில் ஓரளவுக்குத் தவறு நடக்கலாம் என்பதை எதிர்பார்த்தே இருங்கள். ஓரளவுக்கு அதை ஏற்றுக்கொள்ளுங்கள்.

ஒரு நண்பரை ஆறு மணிக்கு ஒரு இடத்திக்கு வரச் சொல்லியிருக்கிறீர்கள். ஆறுமணிக்கு அவர்வரவில்லை. உடனே பொறுமை இழக்க ஆரம்பித்து விடக்கூடாது. பத்து நிமிடம் தாமதமாகலாம். அவர் வரும் வழியில் பஸ் கூட வாகன நெரிசலில் மாட்டியிருக்கலாம். அதையெல்லாம் எதிர்பார்த்தே கொஞ்சம் காத்திருப்பது தவறில்லை. சில சமயங்களில் தாமதமாவது கூட நல்லதாக முடியும். ஒரு பஸ்ஸை தவறவிட்டுவிடுகிறீர்கள் ஐயோ... இரண்டு நிமிடம் முன்னதாக வந்திருந்தால் அதைப் பிடித்திருக்கலாமே என்று தவிர்க்க வேண்டாம். அடுத்து வரும் பஸ் நீங்கள் போகவேண்டிய இடத்திற்கே கொண்டு போய்விடும்.

சில நெருக்கடியான சூழ்நிலைகளை தமாஷாக எடுத்துக்கொள்வதற்குப் பழகிக்கொள்ளவேண்டும். சில இடங்களுக்குப் போகும் போது காத்திருப்பதற்கு நமது மனதை தயார்படுத்திக்கொண்டே போகவேண்டும். ஒரு ரயிலுக்கோ... பஸ்ஸுக்கோ அல்லது விமானத்திற்கோ, கப்பல் பிரயாணத்திற்கோ போகும் போது அங்கே போய் நீங்கள் மணிக் கணக்கில் கூட காத்துக்கொண்டு தான் இருக்கவேண்டும். புறப்படும் நேரம் கூட மாறலாம். நீங்கள் போய்ச் சேர்ந்ததும் அது உடனே புறப்படவேண்டும் என்று கட்டாயமா என்ன? அது போன்ற நேரங்களில் படிப்பதற்கு சில சுவாரஸ்யமான புத்தகங்களைக் கையில் எடுத்துக்கொள்ளுங்கள். உங்களைச் சுற்றி எவ்வளவோ சுவாரஸ்யமான சம்பவங்கள் நடந்து கொண்டிருக்குமல்லவா? அவற்றையெல்லாம் வேடிக்கை பாருங்கள் சார்.

எதற்காக காத்துக்கொண்டிருக்கிறோமோ அந்தக் காரியத்தில் உண்மையாகவே நமக்கு அக்கறை இருந்தால் நமக்கு போரடிக்காது. சில கோயில்களில் பார்த்திருப்பீர்கள் தரிசனத்திற்காக பக்தர்கள் நாள் கணக்கில் காத்துக்கொண்டிருப் பார்கள். அவர்கள் எல்லாம் அலுத்துக்கொள்வதில்லை. கடவுளை தரிசிக்க வேண்டுமென்ற உண்மையான அக்கறை இருப்பதனால் அவர்களுக்கு போரடிப்பதில்லை. சில சினிமா தியேட்டரில் கூட அப்படித்தான். மாலை ஆறுமணி ஷோவுக்கு காலை ஆறு மணிக்கே போய் நிற்பதில்லையா?

இன்னொரு முக்கியமான விடயத்தை நாம் பழக்கப்படுத்திக்கொள்ளவேண்டும் **Live for the moment** என்பார்கள் நிபுணர்கள். நிறையப் பேர் எப்படியென்றால் அடுத்து நடக்கப் போகும் விடயத்திலேயே கவனமாக இருப்பார்கள். அந்த நினைப்பிலேயே இந்த நிமிடத்தை பொறுமையில்லாமல் கழிப்பார்கள்.

ஒருத்தர் இருந்தார். அவர் அலுவலகம் முடிவதற்குள் "சார் ... சார் 5 மணிக்கு தயாராகிவிடுங்கள் நாம் அந்த ஹோட்டலில் போய் டிபன் சாப்பிட வேண்டும்" என்று 4 மணியிலிருந்து சொல்லிக்கொண்டிருப்பார். 4.55 இற்கே பரபரப்பாக வருவார். இரண்டு பேரும் புறப்படுவோம். ஹோட்டலுக்குப் போவோம். சாப்பிடும் போது "சார்...சாப்பிட்டு முடித்ததும் நேராக ஒரு புடவைக் கடைக்குப் போகிறோம்" என்பார். பரபரக்க சாப்பிட்டு புறப்படுவார்.புடவைக் கடையில் அவசர அவசரமாக "சீக்கிரம் பில் போடுங்கள் சார்! சினிமாவுக்கு நேரமாகிவிடும்" என்பார். சினிமா தியேட்டரில் உட்கார்ந்து கொண்டு அடுத்ததாக எங்கே இரவுச் சாப்பாடு சாப்பிடலாம் என்று யோசித்துக்கொண்டிருப்பார்.

இரவு படுக்கையில் விழுந்த பின்பு நாளை காலையில் எழுந்ததும் என்ன செய்யவேண்டும் என்று திட்டம் போட்டுக் கொண்டிருப்பார். எப்போதுமே.... அடுத்த நிமிடம், அடுத்த நாள், அடுத்த வாரம், அடுத்த வருடம். இது தான் அவரது சிந்தனை இந்த நிமிட **enjoyment** ஐ அவர் இழந்துவிடுகிறார். அதனால் வாழ்நாள் முழுவதும் பொறுமை இன்மை, அவஸ்தை அல்லல்! அதனால் நாம் எல்லோரும் வாழ்க்கையில் நிதானமாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.அதற்காக இந்த நிதானத்திற்கு வேறு விதமாக அர்த்தம் செய்துகொள்ளக்கூடாது.

ஒருவர் அப்படித்தான்... ஒரு முறை அவருடைய குதிரை காணாமல் போய்விட்டதாம். அதற்காக அவர் கவலைப்படவில்லை. நிம்மதியாக இருந்தார்! சந்தோஷமாக இருந்தார். "என்ன சார் இது... உங்கள் குதிரை திருட்டுப் போய்விட்டது நீங்கள் கவலைப்படாமல் இருக்கிறீகளே!" என்று கேட்டார்களாம். அதற்கு அவர் "நல்லவேளை சார்... கட்டியிருந்த குதிரை காணாமல் போயிருக்கிறது. நான் அதன் மீது உட்கார்ந்திருந்த சமயத்தில் அது காணாமல் போயிருந்தால் நானும் சேர்ந்தல்லவா காணாமல் போயிருப்பேன்" என்றாராம் மிகவும் நிதானம் தவறாத ஆள்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சு.ப. தமிழ்ச்செல்வன் - கூட்டமைப்பினர் சந்திப்பிலிருந்து...



சந்திப்பின் ஆரம்பத்தில் அகவணக்கம் செலுத்துகையில்...



தமிழ்ச்செல்வனுடன் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்





விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் மற்றும் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களும் தற்போதைய நிலைவரம் குறித்து கலந்துரையாடுகையில்....

# பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கலாம் மீண்டும் யுத்தத்திற்கு இடமளியோம்

## -பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி

(கொழும்பு)

மக்கள்,அரசியல்வாதிகள் என எதுவித வேறுபாடின்றி நாட்டிலுள்ள அனைவருக்கும் இன்று தேவைப்படுவது நிரந்தர சமாதானமே தவிர, யுத்தம் அல்ல என்று பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரண விளையாட்டு அரங்கில் இரு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

போரை மீண்டும் ஆரம்பிக்க யாரேனும் முயற்சிப்பார்களாயின் அதுவே இந்த நாட்டை அழிக்கும் மிகப் பெரிய நடவடிக்கையாகும். இதை மறந்து யுத்தத்தை ஆரம்பிப்பதற்கான வாயிலைத் திறப்பதற்கு எவரேனும் முயற்சித்தால் அது மிகவும் பயங்கரமான செயல் என்று தான் கூற வேண்டும்.

இன்று நான் உங்கள் முன்னிலையில் பேசிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திலும் யுத்தம் ஒன்று ஏற்படுமா? என்ற கேள்விக்கு பதிலை தேடிக்கொண்டே பேசுகின்றேன். ஏனெனில், கடந்த இரண்டு, மூன்று நாட்களாக திருகோணமலையில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், கைக்குண்டு வீச்சு சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்றுள்ளன. இச்சம்பவங்கள் யுத்தம் மீண்டும் ஏற்படும் என்ற ஓர் அச்ச நிலையினையே தோற்றுவித்துள்ளது.

அப்படி ஒரு நிலைமையிலும்,யுத்தம் ஆரம்பிக்கப்படும் நிலைமைக்கு எவரும் செல்லக் கூடாது. யுத்தம் ஏற்படுவதற்கான சூழ்நிலை இருந்தால் அதனைத் தீர்ப்பது தொடர்பாக பேச்சுவார்த்தையில் இறங்க வேண்டும். அதை விடுத்து யுத்தம் பற்றி பேசினால் அந்த பேச்சே யுத்தமாக மாறிவிடும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ந-8,9)

# நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு வினைத்திறன் அதிகரிப்பு அவசியமாகும்

## -ராஜீவ்காந்தி நிறுவகப் பணிப்பாளர் பேராசிரியர் விவேக் வெப்றோல்

(கொழும்பு)

வினைத்திறன் அதிகரிப்பு பொருளாதார அபிவிருத்திக்கான முக்கிய தேவையாகுமென புதுடில்லியிலுள்ள ஆராய்ச்சி கல்வி தொடர்பான ராஜீவ்காந்தி நிறுவகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் விவேக் வெப்றோல் தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை பொருளாதார விஞ்ஞான சங்கத்தின் 2005ஆம்ஆண்டுக்கான கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கை,இந்தியா போன்ற நாடுகள் குறைந்த பட்சம் 8சதவீத பொருளாதார வளர்ச்சி வீதத்தை இலக்காகக் கொள்ள வேண்டும். இந்த வளர்ச்சி வீதத்தை அண்மிப்பதற்கான தேவைகள் என்ன? இதற்கு விடை கூறுவது மிகவும் எளிது.

பொருளாதார அபிவிருத்திக்காக வினைத்திறனை அதிகரிக்கவேண்டும். போட்டித்தன்மை மூலம் இதனை அடைய முடியும். வினைத்திறனுக்காக இலங்கையும் இந்தியாவும் முன்னெடுத்துச் செல்லும் செயல்திட்டம் எந்தவகையிலும் முழுமையடையவில்லை.

பொருளாதார மீள் புனரமைப்பு,அபிவிருத்திக்கான நோக்கம் இரு நாடுகளிலும் இருக்கின்றன. இப் பொருளாதார அபிவிருத்தி செயல்திட்டங்களுக்கு மக்களின் வரவேற்பை ஏற்படுத்துவது அரசியல் ரீதியாக நெருக்கடியான விடயமாகும்.

மீள் புனரமைப்பின் மூலம் ஏற்படக்கூடிய உண்மையான முன்னேற்றத்தை விடவும் எதிர்பார்ப்புகள் உயர்வடைவதே இந் நிலைமைக்குக் காரணமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் பி.வி.ஜயசுந்தர,

அனைத்து வளங்களையும் எடுத்துக்கொண்டால் பொதுவான அடிப்படைக்கட்டமைப்பு எம்மிடம் இல்லை. பொருட்கள் ,சேவைகளைப் போன்றே மனித வளமும் உள் நாடு உட்பட வெளிநாடுகளுக்கு பரிமாற்றம் செய்துகொள்ளும் வசதிகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட வேண்டும்.

அவ்வாறான அடிப்படை வசதிக்கட்டமைப்பு இன்னமும் எமக்குக் கிடைக்கவில்லை. நாமும் எமது கொள்கைகளும் நிதியை எதிர்பார்க்கும் நிலையையே தோற்றுவித்துள்ளது.

தேசிய கொள்கை செயற்பாட்டாளர்களை இந்த செயற்பாட்டிலிருந்து நீக்கவேண்டும். அடிப்படை வசதியின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட பாரிய உதவிச் செயற்பாடு எமக்கு இல்லை எனக் குறிப்பிட்டார். (ந-8)

# துப்பாக்கி வெடித்து சிப்பாய் காயம்

(கிளாலி)

பயற்சியின் போது தவறுதலாக துப்பாக்கி வெடித்ததில் சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கிளாலியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ரமன்குமார என்ற சிப்பாயே காயமடைந்தவராவார்.

காயமடைந்த சிப்பாய் கொழும்பு வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச் சைக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். (ந-4)

# தமிழகப் பயணம்

பயணக் கட்டுரை

# ஆழிப் பேரலை தாக்கிய மாமல்லவபுரக் கடலோரம்


36

மாமல்லவபுரத்தின் மலை உச்சியில் அமைக்கப்பட்ட கற் கோவிலைப் பார்த்துவிட்டு, அங்கு



மாமல்லவபுரத்து கற்பாறையில் அமைக்கப்பட்ட வெளிச்சவீடு

நின்றபடி பூமியை நோக்கினோம். மாமல்லவபுரத்தின் அற்புதமான வனப்பு



காத்தற்கடவுளாகிய கண்ணபரமாத்மாவின் கோவில்

எம்மை ஆட்கொண்டது.

மரங்கள் மலைப்பாறைகள் அதனில் செதுக்கப்பட்ட சிற்பங்கள், அலை மோதும் ஆழ் கடல், ஆலயமணி யோசை இந்த அற்புதமான அமைப்



பள்ளிகொள்ளும் ரங்கநாதப் பெருமான்

பைத்தான் தேவலோகம் என்று சொல் வார்களோ!

உள்ளத்தில் எழுந்த உவகை அங்க இடத்திலிருங்கு நகர்வதற்கு இடம்தரவில்லையாயினும் காத்திருக் கும் ஆட்டோவுக்காக மலையில் இருந்து இறங்கிக் கொண்டோம். மலை அருகே வானுயர்ந்த கலங்கரை விளக்கு. ஏறிப்பார்ப்பதில் வீருப்பு எனி னும் நேரம் அதற்குப் போடும் தடை விதிப்பு, விருப்பை அடைத்துக் கொண்டு ஆட்டோவில் ஏறிக்கொண்டோம்.

ஆட்டோசாரதி அந்த இடத்திற்குக் கூட்டிவந்தார். கருங்கற்பாறைக ளைக் குடைந்து செதுக்கப்பட்ட ஆலயமண்டபம். ஆலமரத்தின் வீழுது கள் போல மண்டபத்தின் தூண்கள், மண்டபச்சுவரில் பாற்கடலில் பள்ளி கொள்ளும் இரங்கநாதப் பெருமான் அருகே வழிபடு சிற்பங்கள் பார்ப்பதற்கு பரவசமாக இருந்தன.

இத்துணை அழகுமிக்க சிற்பங் களை பல்லவ மன்னர்களே முன்னின்று செய்வீத்தார்கள் என்ற செய்தி, தமிழ் மன்னர்களின் அனைத்து ஆற்றலுக்கு நல்லதோர் சான்று.

இதுதவீர, கற்பாறைகளல் செதுக் கப்பட்ட மனித வாழ்வியற் கோலங் கள், கலைத்துவப் படைப்புகள் அன்னத்தையும் மனித மொழிகளில்



மாமல்லவபுர கற்பாறையில் செதுக்கப்பட்ட மகுடாசுரவதம்.

கூறிவிடுவது முடியாத காரியம்.

இடத்தைப் பார்வையிட்ட பின்னர் மாமல்லவபுரத்தின் அழகுமிகு கடலோ ரத்தைப் பார்ப்பதற்காக எம்மைக் கூட்டிச் சென்ற ஆட்டோ சாரதி எம்மை அங்கே இறக்கிவிட்டு விடைபெற்றுக் கொண்டார்.

## மெரீனாவின் அமைப்பில்

சென்னை மெரீனா கடற்கரை



கற்பாறையில் குடையப்பட்ட கல்

போன்ற அமைப்பில் மாமல்லவபுரத்து க்கடலோரம் காட்சி தந்தது. ஆழக் கடல், அதன் ஆக்ரோஷமான அலை, கொல்லுபின் கொல்லுபின் என குரு ஷேத்திரத்தில் நுழைந்த வீஷாமாச் சாரீயாரீன் தேர்போல, வேகம் கொண் டெழுந்தது.

மாமல்லவபுரத்து மக்களை மட்டு மல்ல, உலகெங்கிருந்தும் வருகின்ற வர்களையும் தன் அழகால் வசீகரம் செய்த கடல் அன்னை ஆழிப்பேரலை யாக, வேகங்கொண்டு கடலோரக் குடிமனைகள், வர்த்தக நிலையாங் களை நிலமட்டமாக்கிய சோகம் இன் னமும் அந்தப் பகுதியில் புரையோடிக் கிடக்கின்றது.

ஆண்டாண்டாக, மாமல்லவபுரக் கடலோரத்தில் வாழ்ந்தவர்கள் இப் போது அகதிமுகாம்களில் காலம் கழிக்கின்றனர்.

என் . விஜயன்

மாமல்லவபுரத்தைத் தாக்கிய ஆழிப்பேரலை மனித உயிர்களைக் காவுகொள்ளாது கருணைகாட்டிய அதேநேரம், கடலோரத்தில் அமைக் கப்பட்டிருந்த அன்னை வேளாங்கன் னியின் சொருபத்தையும், வள்ளுவப் பெருமானின் சிலையையும் துன்புறுத் தாமை கண்டு அதிசயத்துப் போனோம்.

விஞ்ஞான அறிவு எத்துணை தூரம் வளர்ச்சி கண்டாலும், அவற் றையெல்லாம் தாண்டி, நடைபெறும் அற்புதங்களுக்கு ஆத்மீகத்தைத் தவிர யாராலுமே விளக்கம் கொடுக்க முடியாமல் இருப்பது தெய்வீகத்தின் திருவருள் என்றே சிந்திக்கத் தோன் றும்.

(வளரும்)

# மனம் திருந்திய திருடன்

பாரதகுடி என்ற ஊரில் பண்ணையார் பரஞ்ஜோதி என்பவர் வாழ்ந்து வந்தார். பக்கத்து ஊரில நடந்த ஒரு திருவிழாவுக்குக் குடும்பத்துடன் போய் விட்டு, குதிரை வண்டியில் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்.

வழியில் ஒரு பெரிய காடு. பொழுது போய்க் கொண்டு இருந்தது. ஏராளமான நகைகளை அணிந்திருந்தார் பண்ணையாரின் மனைவி.

''வண்டியை வேகமாக ஓட்டு'' என்று பதட்டத்துடன் கூறினார் பணணையார்.

வண்டியோட்டி குதிரையைத் தட்டிவிட்டு வேகமாக வண்டியை ஓட்டினார். சிறிது தூரம் போனதும், ''ஐயா..!'' என்று பரிதாபமான குரல் ஒன்று அழைத்தது.

வண்டியோட்டி குதிரையை அடக்கி நிறுத்தினான. ஒருவன் தட்டுத் தடுமாறிக்கொண்டே வண்டி



யின் அருகே வந்து, ''ஐயா! நான் ஒரு கண் தெரியாத பிச்சைக்காரன். எனக்கு வழி தெரியவில்லை. தயவுசெய்து என்னை வண்டியில் ஏற்றிக் கொண்டு போங்கள்'' என்று வேண்டினான்.

பண்ணையார் எரிச்சலுடன் அவனைப் பார்த்தார்.

''உன் தரித்திர நிலைக்குக் குதிரை வண்டி கேட்குதோ? உன்னை ஏற்றிக்கொண்டால் வண்டியே நாறிப்போகும். விலகிப் போ!'' என்று கத்தினார்.

அவருடைய மனைவி மிகுந்த இரக்க குணம் உள்ளவள். ஒரு கண் தெரியாத பிச்சைக்காரனிடம், தன் கணவர் ஈவு இரக்கம் இல்லாமல் கடுமையாகப் பேசியது அவளுக்குப் பிடிக்கவில்லை.

''என்னங்க! உங்களுக்கு இதயம் இருக்க வேண்டிய இடத்தில் இரும்பு இருக்கிறதா? ஒரு குருட்டுப் பிச்சைக்காரனுக்கு உதவி செய்வது, கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்வதை விட உயர்ந்தது.

நீங்கள் அவனுக்கு வண்டியில் இடம் கொடுக்க வேண்டாம். நான் அவனுக்கு வண்டியில் இடம் கொடுத்துவிட்டு நடந்து வருகிறேன்.

இங்க வாப்பா! நீ வந்து வண்டியில் ஏறு'' என்றாள்.

''நீ எதற்காக நடக்கிறாய்? அந்த அழுக்குப் பிச்சைக்காரனுடன் சேர்ந்து உட்கார்ந்து, நானே கஷ்டத்தை அனுபவிக்கிறேன்'', என்ற பண்ணையார் ''அப்பா சாமி வண்டியில் ஏறிக்கொள்'' என்றார்.

பிச்சைக்காரனும் வண்டியில் ஏறிக்கொண்டான். வண்டி புறப்பட்டது. வண்டி சிறிது தூரம் போனதும் ''வண்டியை நிறுத்துங்கள்'' என்று கூறி வண்டியில் இருந்து இறங்கினான் கண் தெரியாத பிச்சைக்காரன்.

''ஏனப்பா இங்கேயே இறங்கிவிட்டாய்? ஊருக்குள் செல்ல இன்னும் நீண்டதூரம் இருக்கிறதே'' என்று புரியாமல் திணறினார் பண்ணையார்.

''நான் இனி உண்மையைச் சொல்லாமல் இருக்க முடியாது. உங்கள் மனைவியின் இரக்க குணம், கல்லாக இருந்த என் மனதை உடைத்து, ஊற்று நீராக்கிவிட்டது. நான் பார்வை தெரியாதவன் அல்ல; திருடன். வேடம் போட்டு உங்களிடம் கொள்ளை அடிக்க வந்தேன். அம்மாவின பேச்சைக் கேட்ட பிறகு இனித் திருடுவது இல்லை உழைத்துப் பிழைப்பது எனறுமுடிவு செய்து விட்டேன். என்னை மனிதன் ஆக்கிய அம்மாவுக்கு நன்றி வருகிறேன்'' என்று கூறிவிட்டு ஓடினான திருடன்.

பண்ணையார் திகைத்தார். திருடனைத் திருத்திய தன் மனைவியின் இரக்க குணததை மனம் திறந்து பாராட்டினார்.

# சிறுவர் அரங்கம்



## இயற்கைப் படைப்பின் இரகசியம்



மேகத்தின் மகிழ்ச்சி மழையாகும்
மலையின் எழுச்சி உணர்வாகும்
மயிலின் தோகை விசிறியாகும்
மரத்தின் இலைகள் விரலாகும்
கிளியின் மழலைப் பேச்சாகும்
மின்மினியின் சுரப்பி ஒளியாகும்
சிலந்தியின் எச்சில் வலையாகும்
தேனீக்கள் சேமிப்புத் தேனாகும்
மானின் கொம்பு அழகாகும்
மண்ணின் துகள்கள் பொன்னாகும்
கடலின் சீற்றம் அலையாகும்
நீரின் வீழ்ச்சி அருவியாகும்
காற்றே உயிரின் மூச்சாகும்
கதிரவன் சக்தி ஒளியாகும்
மனிதனின் திறமை அறிவாகும்
இயற்கையின் படைப்பே இரகசியமாகும்.

வி. தனுசியா, யா/இந்து மகளிர் கல்லூரி.

## உங்களுக்குத் தெரியுமா?

- உலகின் பரிசு கொடுக்கும் நிறுவனங்களில் மிகவும் பெரியது நோபல் பரிசு நிறுவனம் ஆகும்.
- அமெரிக்காவில் முதல் முதலில் வாழ்ந்து வந்தவர்கள் சிவப்பு இந்தியர்கள் ஆவர்.
- தாம் இறக்கப் போவதை அறிவித்துவிட்டு இறந்தவர் அமெரிக்காவின் புகழ் பெற்ற எழுத்தாளரான வில்ரோஜர்ஸ் ஆவார்.
- உலகில் அதிக அளவில் இலவசமாக வழங்கப்படும் வேதம் பைபிள் ஆகும்.
- அதிக அளவில் கட்சிக் கொடிகளைக் கொண்ட நாடுகளில் உலகிலேயே இந்தியாதான் முதலிடம் வகிக்கின்றது.
- ஜப்பான நாட்டில் கிறிஸ்துமஸ் தாத்தா இல்லை. கிறிஸ்துமஸ் பாட்டி தான்.
- முதன் முதலாக வெற்றிலை பயிரிட்ட நாடு மலேஷியா.
- புத்தகங்களின் வலது கை பக்கங்களுக்கு 'ரெக்டோ' என்று பெயர். இடது கை பக்கத்துக்கு 'வெர்சோ' என்று பெயர.
- பிரேசில் நாட்டின் காடுகளில் இருந்து பெறப்படும் தேன் கசக்கும்.
- ரிக்ஷா வண்டி முதன் முதலில் உபயோகத்துக்கு வந்தது ஜப்பான் நாட்டில்தான்.

# பொது அறிவு

01.விண்வெளியில் பயணம் செய்த முதல் பெண்மணி யார்?
02.தலையில் கொம்போடு பிறக்கும் விலங்கு எது?
03.நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய எந்த உயிரினத்தால் மென்று தின்ன முடியாது?
04.எந்த நாட்டை சூரியன் உதிக்கும் நாடு என்று கூறுவர்?
05.மனிதர்களால் எத்தனை விதமான வாசனைகளைப் பிரித்து அறிய முடியும்?
06.இராமாயணத்தில் வரும் இரண்டு மான்கள் எவை?
07.உலகுக்குப் பொதுவான கொடியெது?
08.ஒலிம்பிக்கில் முதல் தங்கப் பதக்கததை வென்ற பெண் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்? எந்த ஆண்டு? எந்தப் பந்தயத்தில் பெற்றார்?
09.உலகின் சினிமா வரலாற்றில் வெளிவந்த முதல் பேசும்படம் எது? எந்த ஆண்டில் வெளிவந்தது?
10.முதல் கற்பனை ரோபோ யாரால் எப்போது உருவாக்கப் பட்டது?

பி.பவானி, கொக்குவில்.

**உண்மையான அடக்கம் எலலா நல்ல பண்புகளுக்கும் அடிப்படை.**
**- நபிகள் நாயகம்**

## விடைகள்

1.வாலண்டினா தெரஸ்கோவா
2.ஒட்டகச்சிவிங்கி
3.முதலையால்
4.ஜப்பான்
5.பத்தாயிரம் வாசனைகளை பிரித்து அறியமுடியும்.
6.அனுமான், மாயமான்
7.தொப்புள் கொடி
8.ரஷ்ய நாட்டைச் சேர்ந்த எலிசபெத் றொபின்சன். 1928இல் 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் முதலாவது தங்கப் பதக்கத்தை வென்றார்.
9.1927ஆம் ஆண்டு வெளிவந்த 'ஜாஸ்சிங்கர்' என்ற ஆங்கிலப் படமே முதலாவது பேசும் படமாகும்.
10.செக்கோஸ்லோவியாவைச் சேர்ந்த கரேல் காபெக் என்ற எழுத்தாளர் 1921 இல் தனது கற்பனை பாத்திரங்களாக ரோபோக்களை உருவாக்கினார்.

# அமில மழை என்பது...

ஏறத்தாழ ஒன்றேகால் நூற்றாண்டுகளுக்கு முன்பு, பிரிட்டிஷ் இரசாயன விரிவுரையாளரான ரொபொட் அங்கஸ் ஸ்மித் (Robert Angus Smith) மான்செஸ்டர் நகரத்தின் மீது தோன்றும் புகை போன்ற கனிமப் படிவுகள், தொழிற்சாலைகளில இருந்து வெளியேறும் கழிவு, வாயுக்களுடனும், அப்பரதேசத்தில் பெய்யும் மழையோடும் தொடாபுடையது எனக் குறிப்பிட்டிருந்தார்.

1872 இல் இவரால் வெளியிடப்பட்ட 600 பக்க ஆராயசசி நூலில் இவ் வபரம் வெளியாகியருந்தது. அதில் தான், முதன் முதலாக, அமில மழை (Acid rain)என்னும் பதம் உபயோகிக்கப் பட்டது.

ஸ்மித்தின் ஆய்வுகள் வெளயிடபபட்டு, சுமார் ஒரு நூற்றாண்டு நிறைவு பெறும் சமயத்தல் 1970 ஆம் வருடம் சுவீடன் நாட்டின் ஏரிகள பலவற்றில் நீர்வாழ் உயிரினங்கள் பல மடியத் தொடங்கின.

அங்கு காடடுப்பிரதேசங்களல் ஓங்கி வளர்ந்திருந்த மரங்கள் பலவும் காய்ந்து பட்டுப் போக ஆரம்பித்தன. அப்போதுதான் அறிவியலாளர்களது மூளையில் நூற்றாண்டுகளுக்கு முனவிடு த்த எச்சரிக்கையும் புலப்படலாயிற்று.

1982இல், சுவீடன் நாட்டுப்பள்ளிச் சறுவர்கள் யாவரும், மேற்த ஜேர்மனி அரசு புதிதாக ஆரம்பததிருந்த தொழிற்சாலைகளினால், சுவீடனைப பாதிக்கும் அமில மழைப் பொழிவிலிருந்து தங்கள் நாட்டைப் பாதுகாக்குமாறு போாக கொடி உயர்த்தினா.

இலங்கை, இந்தியா, சுவீடன், பிரேசில், சனா, தென்னாபிரிக்கா, ஐரோப்பிய நாடுகள் என உலகின் பல் பாகங்களிலும் உள்ள நாடுகளை பாதப்புக்கு உள்ளாக்கிவரும் அமில மழை இன்று ஓர் சர்வதேசப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

# நிறந்தீட்டுவோம் வாருங்கள்!

அன்புக் குழந்தைகளே! உங்களுக்கு விதம் விதமாக வர்ணம் தீட்ட ஆசை தானே! இதோ இங்கு தரப்பட்டிருக்கும் படத்திற்கு வர்ணம் தீட்டி மகிழுங்கள்.



## நீரைத் தேடி......

மழையும் இல்லை நீரும் இல்லை
வெய்லின் கொடுமை பெருங்கொடுமை
வரண்ட பூமியில் நீரைத் தேடி
அலையும் உயிர்கள் பரிதாபம்.

ம.கீதா,யாழ்ப்பாணம்.

## தட்டுத் தடுமாற்றம்

வானம் பொழியாது
வயல் நிலம் தரிசாகி
வாய் பேசா ஜீவன்
வயோதிபரின் துணையுடன்
தண்ணீர் எங்கே?
தன் உணவு எங்கே?
தட்டாந் தரையில்
தட்டுத் தடுமாறுது.....

த.நா.பிள்ளையார்,
மூளாய்.

## வழி காட்டி

வழிகாட்டி - காலை
வாரி விட்டால்
எதிர்கால - இருப்பு
என்றும் சூனியமே!

கி.குகநாதன்,
பருத்தித்துறை.

## பாலை நோக்கி

போர் வடுக்கள் ஒருபுறம்
இயற்கை அன்னையவள்
உறவுகளை பறித்திட
எஞ்சிய ஐந்தறிவு ஜீவனுடன்
இன்னொரு சுனாமியிலிருந்து தபபிக்க
பாலைவனம் நோக்கி
பயணமாகிறீர்களோ?

தர்சன்,நாவலர்வீதி.

## வெப்பக் கொடுமை

பாலையில் புல் மேயும்
பசுவின் பரிதாபம்
இங்கே - பகலவனின்
கொடூர வெப்பத்தால்
பாலை நிலமாயின பசுந்தரைகள்.

S.நித்தியா, கொக்குவில்.

# மௌனத்தின் தேடல்கள் – 65



## எதைத் தேடுகின்றாய்

பாலை நிலத்திலே
ஆதவன் கதிர்களால் தன்
காதலியைத் தேடுகிறான்
முதியவரே!
வாய் பேசா ஜீவனுடன்
எதைத் தேடுகிறீர்?
புதைபட்டிருக்கும் ~ உம்
உறவுகளின் எச்சங்களையா?

சுதர்சன்,
யாழ்ப்பாணம்.

## பஞ்சம்!

பாட்டா!
பாலை நிலத்திலே
மாடு மேய்க்கின்றாயே!
பாழ்பட்ட யுத்த பூமியிலே
பசுந்தரைக்கு
பஞ்சம் வந்ததோ?

P.பவானி, கொக்குவில்.

## முதுமையிலும்!

தரிசு நிலத்திலே
தாகம் தீர்க்கத்
தண்ணீர் தேடி
தவிக்குது ஒரு ஜீவன்!
முதுமையின் கொடுமையிலும்
முயற்சியுடன் துணைவரும்
முதியவரின் ஊக்கம்
மெச்சும் செயலே!

ந.கௌசிகா,நல்லூர்.

## தாகம் தீர்க்க...

குண்டு மாரி பொழிந்து
குன்றும் குழியுமான நிலம்
இன்று - மாரி மழை பொழியாமல்
பாளம் பாளமாய்ப் பிளந்து
பாலை நிலம் ஆனதே!
இங்கே - பாவப்பட்ட
இரு ஜீவன்கள் - தம்
தாகம் தீர்க்க அலையும்
பரிதாபம் ஐயோ!

N.சுதா, யாழ்ப்பாணம்.

# மௌனத்தின் தேடல்கள் - 67



அன்பு வாசகர்களே!
உங்கள்
எண்ணத்தில்தோன்றும்
உள்ளத்து
உணர்வுகளை
**மிகச் சிறிய** கவிதை
களாக்கித்
**தபால் அட்டையில்**
வலம்புரி-
சங்குநாதத்திற்கு
அனுப்பிவையுங்கள.
**கிடைக்கவேண்டிய**
**இறுதித் திகதி** - 24.07.2005 அனுப்பவேண்டிய முகவரி:-

மௌனத்தின தேடல்கள் - 67
**வலம்புரி - சங்குநாதம்**
இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

# கவிதைக் கலசம்

## விமர்சனம்

தூக்கிலிடப்பட்ட
பிணங்களுக்கு
சாகாவரம்
திணிக்கப்பட்டதாய்
விமர்சனங்கள்....
பூ மாலையில்
கட்டிய மலர்களை
மீண்டும் செடியில்
ஒட்டுவதாய்
நம்பிக்கை வார்த்தைகளும்
பிராந்துகளின் வட்ட மடிப்பில்
நிச்சயிக்கப்பட்ட
கோழிக்குஞ்சுகளின்
மரணங்களாய்
காவிச் செல்லப்பட்ட
கருத்துக்களும்....
போலியாய் போனதால்
உளவியல் நோக்கில்
பைத்தியமாகலாம்
விஞ்ஞானப் பார்வையில்
பூமி அழிவதும்
புதிய கண்டு பிடிப்பும்
ஒன்றுதான்
விமர்சனங்கள்
ஆக்க சக்தியா?
அழிக்கும் சாதனமா?
ஏற்றம் பெற வைக்குமா?
ஏமாரச் செய்யுமா?
இல்லை எதுவுமே பொய்மை
எம் கையில் மட்டுமே நிஜம்!

ஜோ.ஜெஸ்ரின்,
கொழும்புத்துறை.

## கடைசி வரையும்....

கடைசி வரை
நினைக்கவேயில்லை - நீ
மறுப்பாயென்று
வரங்கேட்டு முறிகண்டியில்
தேங்காயுடைத்த போதும்
முறியக்கூடாது - என்றுதானே
கேட்டேன்
முளைக்காததை
முறியாதிருக்க கேட்கிறானே-என்று
சிரித்திருப்பான் முறிகண்டியான்!
அதுயெப்படியடி....
அந்த ஒரு சொல்லில் மட்டும்
என் கர்வமெல்லாம்
அழிக்கும் - அரிய மருந்திருந்தது!
சாதிக்க வைத்தது - உன்
நினைவென்றால் எனை
சரிய வைத்தது - உன்
மறுப்படி!
மறுத்த நீ
திட்டியிருக்கலாம்! - எனை
கிழித்திருக்கலாம்!
நிச்சயமாய் - அவற்றின்
பின்னாலொரு எழுகை நிகழ்ந்திருக்கும்!
ஆனால்.....
இனறும் சிரிக்குமுன்னால் - அன்றைய
விழுகையில் ஒட்டிய
தூசு கூட தட்டமுடியவில்லையே...!
இருந்தும் ஒன்று சொல்வேன்
நிச்சயமாக - இனி
கடைசிவரையும் - உனை
நினைக்கவே மாட்டேன்!
(மறந்தால்தானே)

நெற்கொழுதாசன்,
நெற்கொழு.

## ஏன் இந்த சோ(வே)தனை

என்னால் நீ கண்ணீரில்
நனைகின்றாய் என்பதற்காக
இன்று - உன்னால் நான்
கண்ணீரில் மூழ்குகின்றேன்
எப்படி உன் ஆசைகளுக்கு
நான் ஆளானேன்?
உன் ஆசைகளை
வேகவைத்த நான்
உனக்கும் சமூகத்திற்கும்
இன்று குற்றவாளி
பிரகாசமான எதிர்காலம் ஒன்று
உனக்காக அமையும்வரை
எனக்கும் நான் குற்றவாளியே.

தாரணி,
யாழ். பல்கலைக்கழகம்.

## அவஸ்தை



எனக்காக நீயும்
உனக்காக நானும்
நமக்காக காதலும்
யாருக்கும் பிடிக்காமையினால்
உன்னைப் பிரிந்து நானும்
என்னைப் பிரிந்து நீயும்
நம்மைப் பிரிந்து காதலும்
ஏன் இந்த அவஸ்தையோ?

க.பார்த்தீபன்,
உரும்பிராய்.

## என் செல்ல நாய்க்குட்டியே.....



ஓ...
என்னைக் கலங்கடித்து
ஏங்கவைப்பதில் தான் - உனக்கு
எத்தனை இன்பம்!
என் தவிப்புக்கள்
என் ஏக்கங்கள்
என் வருத்தங்கள் - எல்லாம்
புரியாது எப்போதாவதுதான்
தலைகாட்டி - எட்டி நின்று
புன்னகைக்கின்றாய் - சற்றே
என்னை மகிழவைத்து - பின்
காணாமல் தொலைந்து போய் - என்னை
மீண்டும்... மீண்டும்...
கலங்கடித்து தவிக்க வைக்கின்றாய்!
இதென்ன விளையாட்டு
என் செல்ல நாய்க்குட்டியே?
ஓ...!
என்னை ஏங்கவைத்து
கலங்கடிப்பதில்தான் உன
எத்தனை இன்பமல்லவா?



கு.தாட்ஷா, கலட்டி.

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

நிர்வாகத்திற்கான தேசிய பேரவையின் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விணணப்பதாரிகள் இலங்கைப் பிரஜையாக இருப்பதுடன் 18வயதுககுக்குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

அத்துடன் அரச நிர்வாகம், வியாபார முகாமைத்துவம், மனித வளங்கள் முகாமைத்துவம், வியாபார புள்ளிவிபரம், சமூக புள்ளிவிபரம், முகாமை, கணனியியல் ஆகிய பாடத்துறைகளில் ஒன்று அல்லது பலவற்றுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் யாவும் 01.08.2005 ற்கு முன்னா "தவிசாளர், நிர்வாகத்திற்கான தேசியப்பேரவை, அறை இலக்கம் 2.G, 10, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மணடபம், பௌததலோக மாவத்தை, கொழும்பு-07" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுபபவேண்டும். (க)

# உத்தேச அனல் மின் நிலையம் இவ்வருட இறுதிக்குள் நிறுவப்படும்

## -அமைச்சர் சுசில் பிறேம் ஜெயந்த்

உத்தேசிக்கப்பட்டுள்ள அனல் மின் நிலையத்தை நிறுவும் நடவடிக்கைகள் இந்த வருடமுடிவில் நிறைவுபெறுமென மின் சக்தி, எரிசக்தி அமைச்சசுசல்பிறேமஜெயந்த் தெரிவித்துள்ளார்.

இதற்கான இறுதித்திட்ட மதிப்பீட்டு அறிக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி பூர்த்தி செய்யப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு அளித்த விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உத்தேசிக்கப்பட்ட அனல் மின் நிலையத்தை நிறுவும் நடவடிக்கைகள் மூன்று கட்டங்களாக இடம்பெறவுள்ளன. இதன் மூலம் தேசிய மின்கட்டமைப்பு சுமார் 900 மெஹா வாற்ஸ் மின்சாரம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

'இப்போது இறுதித்திட்ட மதிப்பீட்டு அறிக்கையை ஓகஸ்ட் 15ஆம் திகதிக்கு முன்பாக நிறைவேற்ற எதிர்பார்க்கின்றோம்.

அதேவேளை, செப்டெம்பர் மாதமளவில் இதற்குத் தேவையான முதற்கட்ட ஒப்பநதங்களில் கைச்சாத்திடவும் ஒக்டோபர், நவம்பர் மாதங்களுக்கு முன்பாக, அதாவது இந்தவருட முடிவுக்குள் இந்தச் செயற்திட்டத்தை ஆரம்பிக்கவும் எதிர்பார்த்துள்ளோம்.

அலகு ஒன்றின் செலவு 5ரூபாவுக்குக் குறைவாக இருக்கும் நிலையில்தான் தற்போது இருக்கின்றது. டீசல் மூலம் உற்பத்தி செய்கின்ற ஒரு அலகு மின்சாரம் 11ரூபாவினை விடவும் அதிகமாகும். இதனை எடுத்து நோக்குவோமாயின் இது எவ்வளவு முக்கியத்துவம வாய்ந்தது என்பது புரியும்.

மேலும், மின்சார சபையை மீளபுனரமைப்புச்செய்வது தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகள் தற்போது கிடைத்துள்ளன. கடந்த இரு நாட்களுக்கு முன்பு தொழிற்சங்கங்களுடன் இணைந்து நீண்ட பேச்சுவார்த்தை நடாத்தினோம். அந்த அறிக்கையில் குறிபபிடப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடாபாகவும் அதில் உள்ள பலவிடயங்களுக்கும் தொழிற்சங்கங்கள் இணககம் தெரிவித்தன.

எனினும் ஒருவிடயம் தொடர்பாகவுள்ள மாற்றுக்கருத்துக்கள் தெளிவுபடுத்தப்பட்டன. அந்த மாற்றத்துக்கு ஏற்ப அறிக்கையைத் திருததுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மின்சாரசபை என்பது மாற்றமடையவில்லை. மின்சாரசபையை அதேபோன்று நடாத்திச்செல்லும் அதேவேளை அதன் கீழ் தேவையான நிறுவனங்களை அமைத்துக் கொண்டே இந்த மின்சார சபையை மீள் புன்ரமைக்கும் செயல்த்திட்டமும் கொண்டு செல்லப்படும். மின்சாரசபையை 9 அரச நிறுவனங்களாக மாற்ற முன்பு யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-8)

## பாடசாலைகளைச் சூழவுள்ள பிரதேசங்களில்

# "சிகரெட்" விற்பனையை தடைசெய்யும் சட்டமூலம் அடுத்தமாதம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

பாடசாலைகளைச் சூழவுள்ள பிரதேசங்களில் 'சிகரெட்' போன்ற பொருடகளை விற்பனை செய்வதை தடைசெய்யும் வகையிலான சட்டமூலமொன்று அடுத்தமாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக சுகாதார போஷாக்கு மற்றும் ஊவா வெல்லஸ்ஸ அபிவிருத்தி அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இளைய சமுதாயத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய தேசிய ஆய்வுகள் எனும் நூல் வெளியீட்டுவிழா பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யுனிசெப் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த இநநிகழ்வில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,

இச் சட்டமூலத்தை அமுலாக்குவதற்கு அனைவரும் கட்சி பேதங்களை மறந்து ஒத்துழைக்க வேண்டும். விடலைப்பருவம் என்பது மனிதனின் மிக முக்கியமான நிலையாகும். அவர்களைச் சரியான முறையில் வழிநடத்துவது பெற்றோர்களினதும் ஆசான்களினதும் பொறுப்பு மட்டுமன்றி அரசியல்வாதிகளினதும் கடமையாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இன்று இரவுநேர களியாட்ட விடுதிக கலாசாரம் மிக மோசமாக மாறியிருககின்றது. சர்வதேச பாடசாலைகள் தமது மாணவர்களின் கலாசார விழுமியஙகளை, நாட்டுக் கலாசாரத்தைப்பேண வேண்டும். பாதுகாக்கவேண்டும் என்றும் அவர் கூறினார்.

சர்வதேச பாடசாலைகளில் கலாசாரக்குறைபாடுகளுககு "ரோயலபாாக்' சம்பவம மோசமானதொரு உதாரணமாகும். இன்று அதிகளவான சிறுவர் துஷ்பிரயோகங்கள குடும்ப உறுப்பினர்களாலேயே மேற்கொள்ளப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

இதனால் பாலியல் கல்வி, எயிட்ஸ் பறறிய விழிப்புணர்வு, பாதுகாப்பான உறவு முறைகள் பற்றிப் பேசுவதற்கு நாம் வெட்கப்படத் தேவையில்லை.

இவை தொடர்பாக விடலைப் பருவத்தினருக்கு எடுத்துக் கூறப்படவேணடும். இவ் விடயங்களுக்கு அரசாங்கம் உதவி செய்யும் என்பதை நான் உறுதி கூறுகின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி றெட்சாய்வான், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் எச்.ஏ.பி.ஹாஹண்ட லியனகே, கொழும்புப் பல்கலைக்கழக பேராசிரியர் லலானி ராஜபக்ஷ உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-7)

# பங்களாதேஷ் கப்பலை தடுத்துவைக்க உத்தரவு

(கொழும்பு)

கப்பல் துறைமுகக் கட்டணம் செலுத்தப்படாத காரணத்தினால பங்களாதேஷ் வர்த்தகக் கப்பலைத் தடுத்து வைக்குமாறு கொழும்பு துறைமுகக் கப்பல் துறைக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரிக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் பணிப்புரை விடுத்துள்ளது.

சுனாமி அனர்த்தம் இடம்பெற்ற தினத்தன்று கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்த எம்.பி.ஜமீர் எனும இவ் வர்த்தகக் கப்பல் துறைமுகக் கட்டணமான 5 இலட்சத்து 22ஆயிரம டொலரை வழங்கவில்லை என துறைமுக அதிகாரிகள் மேல் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்திருந்ததை அடுத்து இந்தப் பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கப்பல் கட்டணம் இன்றும் செலுத்தப்படாத நிலையில் துறைமுகத்தில் நங்கூரமிட்டு நிற்கின்றது. (க-2)

# எந்த நோக்கத்திற்காக ஆயுதம் ஏந்தினோமோ அதை அடைவதற்கு இறுதிவரை போராடுவோம்

## -மட்டு.அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன்

(கிளிநொச்சி)

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டு இலங்கை அரசுக்கு சரிநிகராக தமிழீழ விடுதலைப்புலிகள் கையொப்பமிட்டுள்ளனர். தமிழ் மக்களுக்கு எதனைச்செய்யவேண்டுமென்றாலும் அதனைத் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாகிய விடுதலைப் புலிகளின் சம்மதத்துடன் செய்யும் நிலையைச் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது என விடுதலைப் புலிகளின் மட்டக்களபபு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

பேரினவாத சிங்கள அரசு மக்களின் அரசாங்கம் எனக் கூறிக் கொண்டு எமது கல்வியினை திட்டமிட்டு உதாசனம செய்து வருகின்றது. எந்தவொரு சமூகமும் தான் சிறந்து வாழவும் தன்னை வளர்த்துக கொள்ளவும் எதிரியின் பிடியில் இருநது பாதுகாத்துக்கொள்ளவும் உலகிலே மிகவும் சிறந்த தற்காப்பு கவசமாகத் திகழ்வது கல்வியே எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களான த.கனகசபை, க.தங்கேஸ்வரி, சே.ஜெயானந்தமூர்த்தி, பா.அரியநேத்திரன் ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட 90 இலட்சம் ரூபா செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடின் மூலம் காககாச்சிவட்டை விஷ்ணு வித்தியாலயத்தில் அமையவிருக்கும் இருமாடிக் கட்டடம் மற்றும் ஆசிரியர் விடுதி எனபனவற்றிற்கான அடிக்கல்நாட்டு விழா கடந்த புதன்கிழமை அதிபர் வீ.கிருஷ்ணமூர்ததி தலைமையில் நடைபெற்றபோது இதில அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், எதிரிகள் எமது பொருளாதாரத்தையும் அபிவிருத்தியையும் பெண்களின் கற்பையும் சூறையாடினார்கள். ஆனால் கல்வியை திட்டமிட்டுப் புறக்கணித்து வந்தார்கள். கற்ற கல்வியை அவர்களால் சூறையாடமுடியாது. இக் கல்வியே எமது வாழ்வை வளம் படுத்திக்கொள்ளச் சிறந்த ஆயுதமாகும்.

தமிழன் ஒன்றை மட்டும் சித்திக்க வேண்டும். நாங்கள் எத்தனையோ நிறுவனங்களை, அரசாங்கங்களை, ஒபபந்தங்களைச் சநதித்து இருக்கின்றோம. அவற்றில் இருந்து புரிந்து கொண்டது ஒரு தமிழனை விடுவிக்கவேண்டும் என்பது. அதனை மாணவ செல்வங்கள் புரிந்துகொள்ள வேணடும். அதற்கு எடுத்துக்காட்டே எமது பாராளுமன்ற உறுப்பினர்களின் இவ்வாறான செயற்பாடாகும்.

அரசு ஒன்றை மிகவும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். நாங்கள் எந்த நோக்கத்திற்காக ஆயுதம் ஏந்தினோமோ அந்த இலட்சியத்தை அடையும்வரை இறுதி மூச்சு உள்ளவரை போராடியே தருவோம். தமிழ் மக்களை ஏமாற்றி விடலாம் என்பதை அரசு கைவிட வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி, இலங்கை இராணுவப்புலனாய்வுப் பிரிவும் அவர்களுடன் இணைந்து செயல்படுபவாகளும் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவோர் மீதும் போராளிகள் மீதும் திட்டமிட்டு படுகொலைகளை மேற்கொள்கின்ற போதிலும் விடுதலைப் புலிகள மிகவும் தெளிவாக, நிதானமாக சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.

விடுதலைப் போராட்டம் எந்த நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அதன் இறுதிக் கட்டம் எட்டும் வரைக்கும் மிகவும் உன்னிப்பாகச் செயற்படுவோம். ஆனால் மக்களை திசை திருப்ப முற்பட்டுக் கொண்டிருககும் சில தீயசக்திகள் பொதுக்கட்டமைப்பை மாத்திரம் தான் புலிகளால் பெறமுடியும் எனக் கூறுவது அவர்களின் தெளிவற்ற தன்மையைக் காட்டுகின்றது.

கல்வி நடவடிக்கை வளர்ச்சியடைய வேண்டுமாயின் தகுந்த சூழ்நிலை அவசியம். அத்துடன், பௌதிக வளமும் காணப்பட வேண்டும். அவற்றுக்கு ஏற்றவாறு இந்தப் பகுதியில் இந்தக் கட்டடம் அமையப்பெற்றது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயனுடையதாக இருக்கும். அத்துடன், இவ்வாறு நான்று பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து அபிவிருத்தித்திட்டம் மேற்கொண்டது இதுவே முதல் தடவையாகும் என்றார்.

இந்நிகழ்வின்போது பா.அரியநேத்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது பேரினவாத சக்திகளுடன குறுகிய அரசியல் இலாபம் கருதி முஸ்லிம் அரசியல்வாதிகளும் பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். ஆனால் முஸ்லிம் மக்கள் நிலைமையை நன்கு உணர்ந்தநிலையில், அரசியல்வாதிகள் மக்களைக் குழப்பும் நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது என்றார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களாக த.கனகசபை, க.தங்கேஸ்வரி, மட்டு.துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் பா.தயாமோகன், கல்விக் கழகப் பொறுப்பாளர் தாயகன், பட்டிருப்பு வலய கல்விப பணிப்பாளர் திருமதி பவளகாந்தன், பிரதேச செயலாளர் உட்படப் பலரும் உரையாற்றினர். (ந-4)

## 14 வருடங்களின் பின்னர்

# கல்வி நிர்வாக சேவைக்கு அதிகாரிகளை சேர்க்க முடிவு

(கொழும்பு)

கல்வி நிர்வாக சேவைக்கு 14 வருடங்களின் பின்னர் இப்பொழுது அதிகாரிகளைச் சேர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் 2002ஆம் ஆண்டில் கல்வி நிர்வாக சேவையில் தரம்-3ற்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கென நடத்தப்பட்ட பகிரங்கப் போட்டிப் பரீட்சைமூலம் தெரிவு செய்யப்பட்ட 61அதிகாரிகளுக்கு நியமனங்களை வழங்குமாறு கல்வியமைச்சு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் சிபாரிசு செயதுள்ளது.

இதேவேளை, அடுத்த மாதம் மற்றுமொரு பரீட்சையை நடத்துவதன்மூலம் பாடசாலை அதிபர்களுக்கு இருந்துவரும் பற்றாக்குறை ஓரளவுக்கு தீர்ந்துவிடும் என்று கல்வி அமைச்சு நம்பிக்கை தெரிவித்துள்ளது. (க-2)

# கடலில் நொருங்கி வீழ்ந்தது விமானம்! அதிலிருந்த 55 பயணிகளும் பலி!!

(மிலாபோ)

ஈக்வெட்டோரியல் சினியா நாட்டில் விமானம் கடலில் விழுந்ததில் அதிலிருந்த 55 பயணிகளும் பலியாகியுள்ளனர்.

ஆபிரிக்காவில் மேற்கு கடற்படை பகுதியல் உள்ள நாடு ஈக்வெட்டோரியல் சினியா. இந்த நாட்டின் தலைநகர் மொலாபோவல இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு ஒரு வமானம் பாட்டான் நகருக்கு புறப்படுச் சென்றது. அந்த உள்நாட்டு போக்குவரத்து விமானத்தில் பயணிகள், சிப்பந்திகள் உட்பட 55 பேர் இருந்தனர்.

விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில அந்த விமானத்தில் இருந்து தரை நிலையத்துக்கு தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த விமானம் என்ன ஆனது? தீவிரவாதிகளால் கடத்தப்பட்டதா? என்பதும் தெரியாமல் இருந்தது.

இப்போது அந்த விமானம் கடலில் நொருங்கி விழுந்தது தெரியவந்துள்ளது.

விமானத்தில் கோளாறு ஏற்பட்டு தாறுமாறாக பறந்த அந்த விமானம் பியாக்கோ தீவு அருகே கடலில் நொருங்கி விழுந்ததாக அந்த நாட்டு உள்துறை மந்திரி தெரிவித்துள்ளார். விமானத்தில் இருந்த 55 பயணிகளும் பலியாகி விட்டனர். (ந)

# ஈராக்கில் குண்டுத் தாக்குதல் 60 பேர் பலி; 120 பேர் படுகாயம்



(பக்தாத்)

ஈராக்கில் சதாம் உசேன் ஆட்சி அகற்றபபட்டு அங்கு புதிய ஆட்சி அமைத்த பிறகும் தீவிரவாதிகளின் வன்முறைத் தாக்குதல நீடித்து வருகிறது.

தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இதுவரை 1,200க்கும் மேற்பட்ட அமெரிக்க வீரர்கள் பலியாகி விட்டனர். தீவிரவாதிகளின தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல அமெரிக்கப் படை திணறி வருகிறது.

இந்த நிலையில், தீவிரவாதிகள் பக்தாத் நகரை அடுததுள்ள முகாபாபீ நகரில் உள்ள காய்கறி மார்க்கெட்டில் நேறறு முன்தினம் திடீர் தாக்குதல் நடத்தினர். அந்த மார்க்கெட்டை ஒட்டியுள்ள பகுதியில் வெடிகுண்டு ஏற்றிய ஒரு லொரி வேகமாக வந்தது. அதை ஓட்டி வந்த தற்கொலைப் படைத் தீவிரவாதி அந்தக் குண்டுகளை வெடிக்கச் செய்தான்.

இதில் அந்தக் குண்டுகள் பயங்கரமாக வெடித்தது. இதில் மார்க்கெட்டிலும், அதன் அருகே உள்ள பகுதியிலும் நின்ற 60 பேர் உடல் சிதறிப் பலியானார்கள். 120க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர்.

குண்டு வெடித்த இடத்துக்கு அருகே எண்ணை ஏற்றிய ஒரு லொரி நின்றது. அநத லொரியும் தீப்பிடித்து பயங்கரமாக வெடித்துச் சிதறியது.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் ஈராக்கில் 16 வெடிகுண்டுத் தாக்குதல்கள் நடந்துள்ளன. இதில் 100 பேர் வரை பலியானமை குறிப்பிடத்தக்கது. (ந)

# ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் விரிவாக்கம் ஓட்டெடுப்பு நடத்த ஜி–4 நாடுகள் கோரிக்கை

ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் விரிவாக்கம் குறித்து ஜி-4 நாடுகள் கூட்டமைப்பின தீர்மானத்தின் மீது ஓட்டெடுப்பு நடத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்க யூனியன் மற்றும் ஜி-4 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் பேச்சுவார்த்தைக்குப் பின்புதான் இந்த விவகாரத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும.

ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர உறுப்பினர் பதவி வேண்டும் என இந்தியா, ஜப்பான், ஜெர்மனி, பிரேசில் ஆகிய நாடுகள் 'ஜி-4 நாடுகள்' என்ற ஒரே குடையின் கீழ் கூட்டாக கோரிக்கை விடுத்து வருகின்றன. இதற்கு அமெரிக்கா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இருப்பினும் நான்கு நாடுகளும் தங்கள் கோரிக்கையில் உறுதியாக உள்ளன.

ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் வீரிவாககத்தின் போது இந்நாடுகள் இரண்டு நிரந்தர உறுப்பினர் பதவிகளையும், நிரநதர உறுப்பினர் அல்லாத பதவி ஒன்றையும் கேட்கின்றன.

அதேபோல 53 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஆபிரிக்க யூனியன் அமைப்பும் தங்களுக்கு 2 நிரந்தர உறுப்பினர் பதவிகளையும், 2 நிரந்தரமற்ற உறுப்பினர் பதவிகளையும் கேட்கின்றது.

ஜி-4 நாடுகள் மற்றும் ஆபிரிக்க நாடுகள் கூட்டமைப்பு இரண்டும் இணைந்து கூட்டாக தீர்மானம் கொண்டுவர முயற்சிகள் மேற்கொண்டுள்ளன. ஆனால், இதற்கு வீட்டோ அதிகாரம் மற்றும் ஆபிரிக்கா கேட்கும் ஒரு கூடுதல் இடம் ஆகிய இரண்டும் முட்டுக்கட்டையாக உள்ளன. இருப்பினும், இரு தரப்பிலும் தொடர் முயற்சிகள மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில், ஐ.நாவுக்கான இந்தியத் தூதர் நிருபம் சென் நேற்று முன்தினம் நிருபர்களைச் சந்தித்தார். அப்போது, 'ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலை விரிவுபடுத்த அமெரிக்கா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள போதிலும் ஜி-4 நாடுகளின் தீர்மானம் குறித்து ஓட்டெடுப்பு நடத்தும்படி நிச்சயம் கோருவோம்' என்றார். (ந)

# சேது சமுத்திரத் திட்டத்திற்கு பரிந்துரைத்தது நான்தான்

## வைகோ தெரிவிப்பு



(புதுக்கோட்டை)

சேதுசமுத்திரத் திட்டத்துக்கு பிரதமரிடம் முதலில் பரிந்துரைத்தது நான்தான் என்று ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ கூறியுள்ளார்.


புதுக்கோட்டை, குன்னாண்டார்கோவில் ஆகிய இடங்களில கடந்த சனிக்கிழமை ம.தி.மு.க செயல் வீரர்கள் மற்றும் ஆய்வுக் கூடட்ம் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்டச் செயலர் க.சந்திர சேகரன் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ மேலும் பேசுகையில்,

ம.தி.மு.கவில் சாதி, மதங்களுக்கு இடமில்லை. எல்லோரும் சமம் என்ற நிலையில்தான் 12 ஆண்டாக இக்கட்சி வளர்ந்து கொண்டிருக்கிறது.

அண்ணாவின் கனவான சேது சமுத்திரத் திட்டத்தை செயல்படுத்த முதன் முதலில் கடந்த பா.ஜ.க ஆட்சியில் பிரதமராக இருந்த வாஜபாய் சென்னை மெரினா கடற்கரையில் நடந்த பொதுக்கூட்டத்துக்கு வந்தபோது, 'முதன் முதலில் சேது சமுத்திரத் திட்டம் செயல்படுத்த வாஜபாயிடம் பொதுக கூட்டத்திலேயே வற்புறுத்தினேன்.

பின்னர் மத்தியில் காங்கிரஸ் அரசு பொறுப்பேற்ற பிறகு பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சென்று பார்த்து சேது சமுத்திரத் திட்டத்தை செயல்படுதத வேண்டும என்றும் இத்திடடம் குறித்து குறைந்தபட்ச செயல்திட்டத்தில் சேர்க்கவேண்டும் என்று வற்புறுத்திக் கூறியதன் பேரில்தான் சேது சமுத்திரத்திட்ட துவக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்றார். (ந)



ஈராக் கிர்கிக் பகுதியில் உள்ள பொலிஸ் ஸ்டேஷன் அருகே 2 தற்கொலைப் படையினர் நடத்தய தாக்குதலில் 28 பேர் பலயாயினர். 100 பேர் காயமடைந்தனர். இதில தீப்பிடித்த காரை தீயணைப்பு படையினர் ஒருவர் அணைக்கிறார்.

# அமெ.விலிருந்து இமாம் நாடு கடத்தல்

(சான்பிரான்சிஸ்கோ)

பாகிஸ்தானைச் சேர்ந்த முகமது அதில கான், அவரது மகன் முகமது ஹசன் ஆகியோர் அமெரிக்காவில் வடக்கு கலிபோர்னியாவில வசித்து வந்தனர். முகமது அதில் கான் அங்கிருந்த மசூதியில் இமாம ஆக இருந்தார். இந்த இருவருக்கும் தீவிரவாதிகளின தொடர்பு இருக்கும் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸார் இவர்களைக் கைது செய்தனர்.

'விசா'வை மீறி குடியேறியதாகவும் இவர்கள் மீது குற்றம் சுமத்தபபட்டது.

இந்த வழக்கில் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட தந்தை மகன் இருவரும் குற்றசசாட்டை மறுத்தார்கள். அமெரிக்காவை விட்டு வெளியேறத் தயாராக இருப்பதாக பதில் அளித்தனர்.

இதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. இதனைத் தொடர்ந்து இமாமும், அவரது மகனும் இன்னும் 2 வாரத்தில் அமெரிக்காவில் இருந்து வெளியேறி பாகிஸ்தான் திரும்புவார்கள் எனத் தெரியவருகிறது. (ந)

# ஒரே நாளில் ஹவாய், பாக்.இல் நிலநடுக்கம்

(ஹவாய்)

ஒரே நாளில் ஹவாய்த் தீவு மற்றும பாகிஸ்தானில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

சுற்றுலா பூமி என்று வர்ணிக்கப்படும் ஹவாய் தீவில் நேற்று முன்தினம் திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டதால் மக்கள் பீதி அடைந்தனர்.

ஹவாய் தீவின் வடகிழக்கு கடலோரப் பகுதியில் கடலுக்கு அடியில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது. இது ரிகடர் அளவையில் 5.2 ஆக பதிவாகியிருந்தது. சுமார் 5 முதல் 8 விநாடிகள் நிலநடுககம நீடித்ததால் வீடுகள் அதிர்ந்தன. கட்டடங்கள் குலுங்கின.

இந்த நில நடுக்கத்தினால் சுனாமி ஏற்படவில்லை என்று ஹவாய் தீவின் எரிமலை ஆய்வுத்துறை விஞ்ஞானி ஜிம் காஹுகுவா தெரிவித்தார்.

திடீர் நிலநடுக்கத்தால் பீதி அடைந்தவர்கள் அந்த அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். நிலநடுக்கததினால் சேதம் ஏதும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

இதேவேளை, பாகிஸ்தானின் கராச்சி நகரில் சனிக்கிழமை காலை திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்திய நேரப்படி காலை 7.47 மணிக்கு இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. இது ரிக்டர் அளவையில் 7.17 ஆக பதிவாகியிருந்தது. இந்த நிலநடுக்கம் கராச்சிக்கு வடக்கே 500 கிலோ மீற்றர் தொலைவில் மையம் கொண்டிருந்ததாக கராச்சியில் உளள பூகம்ப ஆய்வியல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நிலநடுக்கத்தினால் வீடுகள் லேசாக அதிர்ந்ததால் மக்கள் பீதி அடைந்தனர். எனினும் நிலநடுக்கத்தினால் சேதம் ஏற்பட்டதாகத் தகவல்கள் ஏதும் இல்லை. (ந)

# தைவான் பிரச்சினையில் தலையிட்டால் அமெ.மீது அணு ஆயுதத் தாக்குதல்!

## சீனா எச்சரிக்கை

(பீஜிங்)

தைவானுக்காக அமெரிக்கா எங்கள் மீது தாக்குதல் நடத்தினால், அமெரிக்கா மீது அணு ஆயுதத் தாக்குதல் நடத்துவோம் என்று சீன இராணுவத் தளபதி எச்சரித்துள்ளார்.

சீனா அருகே உள்ளது தைவான். சீனாவில் கம்யூனிஸ்டுகள் கை ஓங்கியதும சீனாவில் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தப பாடுபட்ட தலைவரான சன் யாட் சென அங்கு இருந்து தப்பி ஓடி தைவானில் குடியேறினார். அங்கு ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தினார்.

தைவான் இப்போது தனிநாடாக இருந்து வருகிறது. இதை தனிநாடாக ஏற்க சீனா மறுக்கிறது.

தைவானுக்கு ஆதரவாக இருந்த அமெரிக்கா, சீனாவுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொண்ட பிறகு ஆதரவுக்கரத்தை மடககிக் கொண்டது. ஆனால் அதை முழுமையாக மடக்காமல் அடிக்கடி மடக்கி நீட்டி வருகிறது.

அமெரிக்காவின் இந்த நிலை, சீனாவுக்கு எரிச்சலை ஏற்படுத்தி வருகிறது.

எங்களுடன் இணைந்து விடவேண்டும் என்று அது தைவானை மிரட்டி வருகிறது. இணையாவிட்டால் தைவான் மீது போர் தொடுபபோம் என்றும் அது அச்சுறுததி வருகிறது.

அமெரிக்கா ஆதரவு காரணமாக தைவான் சீனாவின் மிரட்டலுக்குப் பணிய மறுக்கிறது.

இந்த நிலையில், சன இராணுவ மூத்த தளபதி ஷுசென்கு வெளிநாட்டு நிருபர்களுக்கு பேட்டி அளித்தபோது கூறியதாவது,

தைவான் பிரச்சினைக்காக எங்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால், அமெரிக்கா மீது அணு ஆயுத தாக்குதல் நடத்துவோம். என் கருத்தைத்தான் நான் உங்களிடம் சொல்கிறேன். அமெரிக்காவுடன் மோதல் ஏற்படும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. மோதல் ஏற்பட்டால் சீனாவுக்கு அணு ஆயுததை கையில் எடுப்பதைத தவிர வேறு வழியில்லை.

அமெரிக்காவுடன் மரபு வழி யுத்தம் நடத்தும் சக்தி சீனாவுக்கு கிடையாது. அமெரிக்கா இந்த விவகாரத்தில் தலையிட்டால் அதற்கு தக்க பதிலடி கொடுகக நாங்கள் தீர்மானித்து இருக்கிறோம்.

ஷியானுக்கு கிழக்கே உள்ள அனைத்து நகரங்களும் அழிக்கப்படலாம். அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அதேபோல அமெரிக்காவும் அதன் நூற்றுக்கணக்கான நகரங்களை இழக்கத் தயாராக இருக்க வேண்டும்.

இதுபற்றி சீன வெளிநாட்டு இலாகா செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில்,

அந்தத் தளபதி பேட்டி அளித்தது அரசின் கருத்து அல்ல. அரசு சார்பில் அவர் பேசவில்லை. இதுகுறித்து வெளிநாட்டு அமைச்சரகம் பரிசிலீக்கும் என்று கூறினார்.

இராணுவ அமைச்சரகம் இதுபற்றி கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டது.

1964ஆம் ஆண்டு சீனா முதலில் அணுகுண்டு வெடித்துச் சோதனை செய்தது.

சீனாவின் அணு ஆயுதத் தாக்குதல் மிரட்டல் குறித்து தைவான் இராணுவ அமைச்சரகம் நேரடியாக விமர்சிக்க மறுத்துவிட்டது.

அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவது சர்வதேச நாடுகளின் கண்டனத்துக்கு உரியது என்று மட்டும் கூறியது. (ந)

# மரணத்தின் நிழலில் 6

## மீள் பார்வை சதாம் கதை

பி.ஜே.ராஜய்யா

## வீரம் வெளஞ்ச மண்ணு



'சதாம் ! இந்தத் துப்பாக்கியை நீயே வச்சுக் கன்னு ஒருநாள் உனக்கு குடுப்பேன் அதுக்கு முந்தி நான் சொல்றதை எல்லாம் நீ கேட்டு நல்லா புரிஞ்சுக்கனும்' என்றார் கைருல்லா மாமா. சதாம் சந்தோஷமாய் தலையாட்டினான். அவன் கையிலிருந்த துப்பாக்கியை திருப்பி வாங்கிக்கொண்டார் மாமா. அன்றிலிருந்து அவர் சதாமுக்கு நிறைய செய்திகள் சொன்னார். அவனோடு சேர்ந்து சாப்பிடும்போது, காலாற நடந்து போகும் போது, தூங்கச் செல்லும் போது என்று நேரம் கிடைக்கும் போதெல்லாம் பல சரித்திரத் தகவல்களை விளையாட்டுப்போல் சொல்லிக் கொண்டே வந்தார்.

வகுப்புல பாட்ம் எழுதுற, வீட்ல எழுதுற, ஆபீசுக்குப் போய் பாத்தா தெரியும் அங்கேயும் எல்லாரும் எழுதுறாங்க. இந்த எழுத்துக் கலையை உலகத்திலேயே முதன்முலாகக் கண்டுபிடிச்சது யார் தெரியுமா?

யார் மாமா?

"நாம தான். ஐயாயிரம் வருஷத்துக்கு முன் நம்ம நாட்டுக்குப் பேர் மெசபடோமியா. இங்கிருந்த சுமேரியர்கள் தான் முதன்முதலா எழுத்துக் கலையை உலகத்துக்கு அறிமுகப்படுத்தினாங்க"

இதைக் கேட்டு 'அடேங்கப்பா' என்கிற மாதிரி கண்களை அகல விரித்தான் சதாம்.

"உலக அதிசயங்களில் ஒண்ணு- தொங்கும் தோட்டம், நெபுகத்நேசர் ராஜா பாபிலோன்ல அமைச்சது அந்த பாபிலோன் எங்க இருக்கு தெரியுமா?"

"எங்க மாமா இருக்கு?"

"நம்ம நாட்டுலதான் பாக்தாத்துக்கு பக்கத்துல"

சதாமுக்கு பரவசமாக இருந்தது.

"நம்ம மண்ணு வீரம் வெளஞ்ச மண்ணு. சதாம்...நீ பெறக்குறதுக்கு எண்ணூறு வருஷத்துக்கு முந்தி நம்ம திக்ரித்துல ஒரு மாவீரர் பிறந்தார். அவர் பேர் சலாவுதீன். மெசபடோமியாவோட எகிப்தையும், சிரியாவையும் இணைச்சு பெரிய பேரரசை ஏற்படுத்தினார். அவரோட செல்வாக்கைப் பாத்து ஐரோப்பாக்காரர்களுக்கு பயம் வந்துருச்சு. சலாவுதீனை ஒழிச்சாத்தான் நாம நிம்மதியா இருக்க முடியும்னு நினைச்சாங்க.

"இங்கிலாந்து ,பிரான்ஸ், ஜெர்மனி -மூணு நாட்டு ராஜாக்களும் கூட்டுச் சேர்ந்து பெரிய படையைத் திரட்டி வந்து சலாவுதீனோட மோதுனாங்க. இதுக்கு "மூணாவது சிலுவைப் போர்" ன்னு பேர். ஆனா, நம்ம சலாவுதீன் அந்த வெள்ளைக்காரப் படையை ஓட ஓட விரட்டியடிச்சிட்டார். திக்ரித்காரர்ன்னா என்ன சும்மாவா?"

"நம்மளும் திக்ரித்காரங்க தானே மாமா?"

"இல்லையா, பின்னே?"

இப்படி மாமா தன் நாட்டுப் பெருமைகளை சின்னச் சின்ன வார்த்தைகளில் விவரிக்கையில், அதைக் கேட்டு பிரமிப்பான் சதாம். "நம்ம அரபு மண்ல பெட்ரோல் இருக்கு அதனால்தான் அரபு மண்ணுக்கு கிராக்கி .இந்த பெட்ரோலுக்கு என்னிக்கி மவுசு வந்துச்சு தெரியுமா?" என்று மாமா கேட்டார். உதட்டைப் பிதுக்கினான் சதாம். "இருபதாம் நூற்றாண்டோட தொடக்கத்துல..."

"அப்படின்னா...?"

பத்தம்பது வருஷத்துக்கு முந்தினு வச்சிக்கோயேன். அப்ப இங்கிலாந்து நாடு தான் உலகத்துலேயே பெரிய சூப்பர் ஸ்டார்...!"

"சூப்பர் ஸ்டாரா?"

"ஆமா! சண்டை போட்டு நிறையப் பேரை தோக்கடிக்கிற ஆளைத்தானே சூப்பர் ஸ்டார்னு சொல்றோம். அதுமாதிரி இங்கிலாந்தும் நிறைய நாடுகளோட சண்டை போட்டு தோக்கடிச்சு, அந்த நாடுகளை அடிமையா வச்சிருந்துச்சு!" "இங்கிலாந் துக்கு மட்டும் ஏது மாமா அவ்வளவு பலம்?"

"இங்கிலாந்தோட பலம் அதன் நவீன போர்க்கப்பல்கள் தானாம். இங்கிலாந்து போர்க்கப்பல்கள் ஒரு சண்டையில எறங்கினா ஜெயிக்காம திரும்பாதாம். இப்படி இங்கிலாந்துக்கே பெரிய பலமா இருந்த போர்க்கப்பல்களுக்கு ஒரு பிரச்சினை வந்துச்சு. அந்தக் கப்பல்களுக்கு வேணும்கிற அளவு சாப்பாடு கிடைக்கல அதான் பிரச்சினை"

"கப்பல் சாப்பிடுமா மாமா?"

"ஆமா! நாம சாப்பிடுறதால தான் ஓடமுடியுது. அதுமாதிரிக் கப்பலும் சாப் பிட்டாதான் கடல்ல ஓடமுடியும். சண்டை போட முடியும். ஆனா ஒரு வித்தியாசம் நமக்கு ரொட்டி சாப்பாடு. கப்பலுக்கு நிலக்கரி சாப்பாடு அப்ப"

"பிரச்சினை என்னன்னா, இங்கிலாந்துக் கப்பல்களுக்கு போதுமான அளவு சாப்பாடு- நிலக்கரி கிடைக்கல. நிலக்கரி அபூர்வமா கிடைக்கிற பொருள். அதனால, அது எக்கச்சக்கமான விலை. அப்படியே எவ்வளவு பணம் போட்டாலும், போதுமான அளவு நிலக்கரி கிடைக்கல. இதனால, இங்கிலாந்து போர்க்கப்பல்கள் பட்டினி கிடக்கும் ஆபத்து வந்திருச்சு. போர்க்கப்பல்களோட பலம் போயிட்டா, நம்ம கதி என்னாகும்னு 'சூப்பர் ஸ்டார்' இங்கிலாந்துக்கு ஒரேபயம்.

இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்ட என்ன செய்யலாம்னு பெரிய பெரிய ஆட்களெல் லாம் உட்கார்ந்து ஆராய்ச்சி பண்ணினாங்க. கடைசியில போர்க்கப்பல்களுக்கு நிலக்கரிக்குப் பதிலா தாரளமாகவும், குறைஞ்ச விலையிலும் கிடைக்கிற பெட்ரோலை சாப்பாடா குடுக்கலாம்னு முடிவு.

"1911ஆம் வருஷம் முதல் முதலா இங்கிலாந்து போர்க்கப்பல்கள் பெட்ரோல் சாப் பிட்டு ஓட ஆரம்பிச்சது. போர்க்கப்பல்களுக்கு பெட்ரோல் என்னிக்கி பயன்பட ஆரம் பிச்சதோ அன்னியிலிருந்து தான் நம்ம அரபு மண்ணுக்கும் ,அரபு பெட்ரோலுக்கும் மவுசு ஏற ஆரம்பிச்சதாம்..."

கண்கொட்டாமல் ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டிருந்தான் சதாம். அரபு நாடுகளில் கிடைக்கும் பெட்ரோலுக்கு நல்ல கிராக்கி என்று அவன் கேள்விப்பட்டி ருக்கிறான். ஆனால், அந்தப் பெட்ரோலுக்கு உலக அளவில் எப்போது மவுசு வந்தது என்று மாமா சொன்ன பிறகுதான் சதாமுக்குத் தெரியும். புதிய தகவல் ஒன்றைத் தெரிந்து கொண்ட மகிழ்ச்சி அவன் முகத்தில்...

அந்த மகிழ்ச்சியை மாமா சொன்ன அடுத்த தகவல் குலைத்துவிட்டது...

(தொடரும்)

## மாகாண மட்ட

# கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் கடந்த 9,10 ஆம் திகதிகளில் நடைபெற்ற மாகாண மட்ட கூடைப்பந்தாட்ட இறுதிப்போட்டியில், 19 வயது பெண்கள் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரி அணியுடன் மோதி கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மாகாண மட்டத்தில் சம்பியனானது.



கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் மற்றும் பிரதி அதிபர்கள், ஆசிரியர்களுடன் கூடைப்பந்தாட்ட அணியினர் எடுத்துக் கொண்ட படம்.

மாகாண மட்ட சம்பியனான கொக்குவில் இந்துக்கல்லூரி அணி தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்கு தகுதி பெற்றுள்ளது.

கல்வியமைச்சினால் நடாத்தப்பட்ட இப்போட்டியில் யாழ்.மாவட்டத்தின் 1 வது சம்பியன் அணி இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# 2012 இல் ஒலிம்பிக் போட்டி; 440 கோடி ரூபா செலவிடப்படும்

(கொழும்பு)


லண்டனில் 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்த 440 கோடி ரூபாய் செலவு செய்ய பிரிட்டன் அரசு முடிவு செய்துள்ளது.

வெற்றி பெறும் வீரர்களுக்கு பதக்கம் வழங்க மட்டும் இந்தப் பணம் செலவு செய்யப்படும். 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்த லண்டன் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் பிரிட்டிஷ் விளையாட்டு இயக்குநர்கள் அரச அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

அப்போது 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிக்கான செலவுத் தொகையை உயர்த்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்கள். அதற்கமைய 2012இல் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியை கௌரவ பிரச்சினையாகக் கருதி மிகச் சிறப்பாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் பிரிட்டிஷ் ஒலிம்பிக் அசோசியேசன் மிகக் கவனமாக இருப்பதாக அதன் தலைவர் சிமோன் கிளெக் தெரிவித்துள்ளார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு எதென்ஸில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் பிரிட்டன் 10 ஆவது இடத்தில் இருந்தது. 2000ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டியில் பிரிட்டன் மொத்தமாக 28 பதக்கங்களை வென்றமை தெரிந்ததே . (க-9)





கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சரவணை மேற்கு பாரதி சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்புவிழாவில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட சரவணை மேற்கு கிராம சேவையாளர் பரமேஸ்வரன் மங்கள விளக்கேற்றுகிறார்.

அருகில் பாரதி சனசமூக நிலையத் தலைவர் ச. கேதீஸ்வரன், போசகர் சி. மகாலிங்கம் ஆகியோர் நிற்பதையும், தீவகக்கல்வி வலய தமிழ் ஆசிரிய ஆலோசகர் திருமதி ஜெயநாயகம் நாடாவெட்டி புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:புங்குடுதீவு செய்தியாளர்)

ஆற்றாரும் ஆற்றி அடுபஇடன் அறிந்து
போற்றார் கண் போற்றிச்செயின் - குறள்

வலம்புரி

# புற்றுநோய் வைத்தியசாலை தன்பணியை சிறப்பாக ஆற்றவேண்டும்

இலங்கையில் உள்ள புற்றுநோயாளர்களில் அதிகமானவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்ற புள்ளி விபரங்கள் அதிர்ச்சியானவை.

தொற்றாத நோயாக புற்றுநோய் வகைப்படுத்தப்பட்டாலும் யாழ்ப்பாண மாவட்டத்தின் நோய் நிலையிலும் இறப்புக்கான காரணத்திலும் புற்றுநோய் முதன்மை பெற்றிருப்பது குறித்தும் அனைத்துத் தரப்பும் ஆழமாக சிந்திக்க வேண்டும்.

என்ன காரணத்தினால் புற்றுநோய் ஏற்படுகின்றது. புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகள் என்ன? என்பதை மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தும்போது நோய் பற்றிய விழிப்புணர்வை இலகுவில் ஏற்படுத்திவிட முடியும்.

வைத்தியசாலைகளைப் பொறுத்தவரை அவை நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதுடன் தமது பணியை நிறைவு செய்து கொள்கின்றன.

நோய் வந்த பின்னர் சிகிச்சை அளிப்பது என்பதற்கு அப்பால் நோய் வராமல் தடுக்கும் பணி முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டால் வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள மருத்துவர்களின் பற்றாக்குறை, கட்டில்களின் எண்ணிக்கை போதாமை, மருந்துப் பொருட்களின் தட்டுப்பாடு என்ற பிரச்சினைகள் இல்லாமல் போய்விடும்.

நோயாளர்களாகிய பின்னர் சிகிச்சையளிப்பது என்பது நனைத்து சுமப்பதற்கு ஒப்பானதாகும். மேற்கூறப்பட்ட கருத்தானது நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கலாகாது என பொருள் கொள்ளலாகாது.

மாறாக நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் அதேநேரம் நோய் வராமல் தடுக்கும் நடவடிக்கைகளையும் முன்னெடுப்பது மிகவும் அவசியமாகும்.

இது விடயத்தில் பிராந்திய சுகாதாரத் திணைக்களமும் அதன் கீழ் செயற்படும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளும் பொறுப்புடன் செயற்படவேண்டும்.

குறிப்பாக வெளிக்களத்தில் சேவையாற்றும் பொதுச் சுகாதாரப் பணியாளர்கள் தமது கடமைகளை செம்மையாகச் செய்யும்போது அதனால் மக்கள் மத்தியில் ஏற்படும். விழிப்புணர்வு, நோய்த் தடைக்கான வழியாக இருக்கும்.

அவ் வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்து வரும் புற்றுநோய் பரவலை தடுப்பதற்கு பொருத்தமான திட்டங்களை மேற்கொள்வது காலத்தின் கட்டாய தேவையாகும். யாழ். மாவட்டத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் கடந்த காலங்களில் சிகிச்சை பெறுவதில் பட்ட கஷ்டாங் கள், சிக்கல்கள் சொல்லி மாளாது. யாழ். மாவட்டத்தில் புற்றுநோய்க்கு சிகிச்சையளிப்பதற்கான வைத்தியசாலை மற்றும் வைத்திய நிபுணர்கள் இல்லாமையால் மகரகமவில் சிகிச்சை பெறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

மகரகமவிற்கு செல்லும் வடபுலத்து புற்றுநோயாளர்கள் மொழிப் பிரச்சினையை அனுபவித்தனர். அது மட்டுமன்றி தமிழர்கள் என்ற காரணத்தினால் சிங்கள மருத்துவ பணியாளர்களினால் ஒரங்கட்டப்பட்ட நிகழ்வுகளும் துன்பகரமானவை.

புற்றுநோயுடன் யாழ்ப்பாணத்திலிருந்து மகரகமவிற்கு சென்ற ஒரு நோயாளியின் எதிர்பார்ப்பு நோய் குணமாகி தனது உறவுகளுடன் சில காலம் வாழவேண்டும் என்பதாகும்.

எனினும் ஒரு மனிதத்தின் வாழ்வியல், இனம் என்ற பேதத்தால் அழிக்கப்பட்டமை ஒருபோதும் மன்னிக்க முடியாது.

இந் நிலையில் தெல்லிப்பழையில் அமைக்கப்பட்டுள்ள புற்றுநோய் வைத்தியசாலை தனது பணியை செம்மையாகச் செய்யவேண்டும்.

அதன் மூலம் புற்றுநோயாளர்களின் எதிர்பார்ப்பு நிறைவேற வேண்டும்.

# பொதுக்கட்டமைப்புக்காக பாடுபட்டவர்களை அடுத்த தேர்தலில் நிச்சயம் தோற்கடிப்போம்

## ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ சூளுரை

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பை நிறைவேற்ற பாடுபட்ட அமைச்சர்கள மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை அடுத்த தேர்தலில் வெற்றி பெறச் செய்ய இடமளிக்கப் போவதில்லை என்று ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

நாடடை வெற்றி கொள்ளச் செய்யும் வேலைத்திட்டத்தின பிரதான அங்கம் இதுவாகும் என்றும் மகியங்கனையில் இடம பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு எனும் நாட்டை பிளவுபடுத்தும் உடன் படிக்கையைக் கைச்சாத்திட துணைபோனவர்களை பாராளுமன்றத்தில் தொடர்ந்தும் வைத்திருக்க முடியாது. உடனடியாகப் பாராளுமன்றத்திலிருந்து அவர்களை வெளியேற்ற வேண்டும். அடுத்த தேர்தலில் நாம் இதனைக் கட்டாயம் செய்து முடிப்போம்.

நாம் அரசாங்கத்திலிருந்து விலகியது குறித்து பொது மகக்கள் கவலை அடைந்துள்ளனர். ஆனால் உண்மையானதும் நீதியுமான ஸ்ரீலங்கா சுதந்திரக கட்சியினர் எம்முடன் இருக்கிறார்கள்.

அமைச்சரவையில் இருப்பவர்களும் எமக்கு ஆதரவாக இருக்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவி கேட்டு வீதியில் அலைகிறார். எப்படியிருப்பினும் மீண்டும் ரணில் ஆட்சிக்கு வர நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம. ரணில் பாவம். பகல் கனவு காண்கிறார். மேற்கத்தேய சக்திகளின் கைப்பொம்மைகளாகி நாட்டை சீரழிக்க முயலும் சதிகாரக் கும்பலிடம் நாட்டை ஒப்படைக்க நாம் தயாரில்லை.




சமாதானம் பற்றிப் பேச இந்த நாட்டிற்கு வரும் சொல்ஹெய்மை பற்றி நோர்வே நாட்டவர்களுக்கே ஒன்றும் தெரியாது. அந்த நாட்டை பாராளுமன்றத் தேர்தலில் ஆயிரம் வாக்குகளைக் கூடப் பெறாத, தொழில் கூட இல்லாத அவர் எமது நாட்டின் தலைவியுடன் சமாதானம் பற்றிப் பேசுகிறார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்னும் ஆறு மாதங்களோ ஒரு வருடமோ தான் பதவி இருக்கின்றது. அதன் பினனர் அவரின் பதவி பறிபோய் விடும்.

இது தான் நாட்டின் சட்டம்.அரசியலமைப்பை மீறி எவராலும் செயற்பட முடியாது. ஜனாதிபதி பதவி முடிந்தவுடன் அவருக்கு நோபல் பரிசு கிடைக்கும். ஐ.நா.வில் முக்கிய பதவி கிடைக்கும் என்று நம்பித் தான் நாட்டை தாரைவார்க்கும் பொதுக கட்டமைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட அவர் துணிந்தார் என சோமவன்ஸ மேலும் தெரிவித்தார். (ற-4)













அகில இலங்கை இந்துமாமன்றப் பொன்விழாவையொட்டி அகில இலங்கை இந்துமாமன்றமும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து நடத்தும் இந்துமாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற காலை நிகழ்வில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதுநிலை தமிழ்ப் பேராசிரியரும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் சிறப்பு நிலைப் பேராசிரியருமான சோ.ந.கந்தசாமி 'புராணங்களின் படிப்பினைகள்' என்ற தலைப்பில உரையாற்றுவதையும், மேடையில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா, இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் இந்து மன்றத்தின் தலைவர் அரவிந்தன் ஆகியோர் அமர்ந்திருப் பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட பெரியார்களையும், ஆரம்ப உரை ஆற்றிய யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜாவுக்கு நீதியரசர் சி.வி.விகனேஸ்வரன் நினைவுச் சின்னம் வழங்கிக் கெளரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:ஞா. ஐங்கரன்)

# வீடுகள் வழங்கப்பட்ட போதிலும் கூடாரங்களில் வசிக்கும் மக்கள்

## நிவாரணம் பெறுவதற்கு போடும் வேஷம் என்கிறார் அமைச்சர்

(கொழும்பு)

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கியிருக்கும் முகாம்களும், கூடாரங்களும் அடுத்த மாத இறுதிக்குள் முற்று முழுதாக அகற்றப்படும் என நகர அபிவிருததியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் ஆழிப்பேரலையினால் இடம்பெயர்ந்துள்ள 42,353 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன. அந்த வீடுகளில் வசிக்கும் அந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பல்வேறு அமைப்புக்களிடமிருந்து கிடைகதும் நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக தொடர்ந்தும் கூடாரங்களில் வாழ்ந்து வருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.


அவ்வாறானவர்களைக் கண்டுபிடித்து அவர்களை உடனடியாக அங்கிருந்து அப்புறப்படுத்த பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டவர்கள் 84 முகாம்களில் தங்கியுள்ளனர்.

அங்கு வசிக்கும் 4,784 குடும்பங்களுக்கென 4,288 தற்காலிக வீடுகள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன.

அதன்பின்னர் கிடைக்கும் நிவாரணங்களை மாவட்ட செயலாளர்கள் மற்றும் கிராமசேவகர்களூடாக பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுளளது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (து-4)

## திணசரி தியானம்



### விவேகச் சிந்தனைகள்

பொறுமை இல்லாதவன் ஒரு போதும் வெற்றிபெறமாட்டான் கண்ணாடி மீது படிந்துள்ள அழுக்கைத் துடைத்து விடு. உன் மனத்தைத் தூயதாக்கிக் கொள்ள. நீயே பிரம்மம் என்பதை ஒரு நொடியில் அறிவாய். யாரையும் தீயவன் என்று சொல்லாதே. "நீ நல்லவன். இன்னும் நல்லவனாக இரு" என்று சொல். பிறரைக் கண்டிப்பதெல்லாம் தன்னைத்தானே கண்டித்துக் கொள்வதாகும்.

சுவாமி விவேகானந்தர்

# தேர்தல் ஆணையாளருடன் சட்டமா அதிபர் சந்திப்பு

## ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மக்கள் பேரணி நிகழ்ந்து 24 மணிநேரத்தினுள் தேர்தல் ஆணையாளருக்கும் சட்டமா அதிபருக்கும் இடையே முக்கிய சந்திப்பு நடந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இச் சந்திப்பு சுமார் இரண்டரை மணிநேரம் நடந்துள்ளது. அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதற்கான காலம் குறித்து எழுந்துள்ள சிக்கல்கள் குறித்தே இவ்விருவரும் உரையாடியிருப்பதாக தெரியவருகிறது.

அத்துடன் அப் பிரச்சினை தொடர்பாக மிக இரகசியமான ஒரு முடிபினை இருவரும் எடுத்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சில அரசியல் கட்சித் தலைவர்களும் ஊடகவியலாளர்களும் இச் சந்திப்புக் குறித்து தேர்தல் ஆணையாளரிடமும் சட்டமா அதிபரிடமும் வினவியுள்ளனர்.

எனினும் கடந்த பொதுத் தேர்தலில் விருப்பு வாக்கு பற்றிய வழக்கு ஒன்று சம்பந்தமாகவே இருவரும் உரையாடியதாக அவ்விருவரும் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் சம்பந்தமான முடிவினை அறிவிக்கும் வரை அதனை வெளியிடாது இருப்பதற்கு தேர்தல் ஆணையாளரும் சட்டமா அதிபரும் முடிபு செய்திருப்பதாக கூறப்படுகிறது. (ச)

## சடலம் மீட்பு

(கல்வியங்காடு)

திருநெல்வேலி வைரவர் கோவில் மண்டபத்திலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சுமார் 65 வயது மதிக்கத்தக்க ஒருவருடைய சடலமே மீட்கப்பட்டுள்ளது.

அநாதரவாகக் காணப்பட்ட சடலத்தைப் கோப்பாய் பொலிஸார் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

(ச-74)

## தூக்கு மரங்கள் எடுத்துவரப்பட்டன

(கொழும்பு)

இலங்கையில் மரணதண்டனையை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்படும் இரண்டு தூக்குமரங்கள் வெளிநாடு ஒன்றிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு தூக்கு மரங்களையும் பரீட்சிக்கம் நோக்கில் குழுவொன்றையும் நீதியமைச்சு நியமித்துள்ளது.

இந்தக் குழு குறித்த இரண்டு தூக்கு மரங்களில் சிறந்த ஒன்றை தெரிவுசெய்து பரிந்துரைக்கும்.

மரண தண்டனை நிறைவேற்றப்படும் பணிகள் முன்னெடுக்கப்படும் என்றும் நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

(ச-8)

## கூட்டம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய அரசியல் நெருக்கடி நிலை தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கான கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ். பல நோக்குச் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

முன்னர் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற ஏற்பாடாகியிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணத்தினால் இடமாற்றப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இக் கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் தேசிய எழுச்சிப் பேரவை, பொது அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், தொழில் சார் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் சமய, சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது. (ச)

# அரசினதும் படைகளினதும் செயற்பாடே...

நேற்று கிளிநொச்சியில் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பை முடித்துக்கொண்டு ஊடகவியலார்களுக்கு நேர்காணல் வழங்கிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் வழங்கிய நேர்காணலில் முக்கிய பகுதிகள் வருமாறு

கேள்வி:- இன்றைய சந்திப்பு தொடர்பாக

பதில் :- தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இன்றைய சந்திப்பு இடம்பெற்றது. வழமையாக இடம்பெறும் சந்திப்பாக இது அமைந்தது. இருப்பினும் இன்றைய அரசியல் களச்சூழலில் மிகநெருக்கடியான கால கட்டத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றதன் காரணமாக முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது. இன்றைய நிலையில் தமிழ்மக்கள் நெருக்கடியான சூழலுக்குள் தள்ளப்பட்டிருப்பது தொடர்பாகவும் தமிழ்மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி பற்றியும் தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்மக்களுடைய நெருக்கடி நிலைமை தொடர்பாக சர்வதேச சமூகத்திற்கு எடுத்துரைக்கப் போவதாகவும் வாக்குறுதியளித்துள்ளனர்.

அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ்மக்களின் நிலைப்பாடு தொடர்பாக சர்வதேச சமூகத்திற்கு எடுத்துரைக்கும் பணியில்

கேள்வி :- பொதுக்கட்டமைப்பு தொடர்ப்பில் சிறிலங்கா உயர் நீதிமன்றம் விதித்துள்ள தீர்ப்பு தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் உணர்வலைகள் எவ்வாறுள்ளது?

பதில்:- தமிழீழ விடுதலைப் புலிகளை பொறுத்தவரையில் இத்தீர்ப்பு துரதிஷ்டவசமானது ஏனெனில் கடந்த காலங்கள் போலவே தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மைகளும் சென்று விடக்கூடாது. தீர்வு முயற்சிகள் எதுவும் வெற்றிபெறக்கூடாது என்பதில் சிங்கள பேரினவாதத் தலைமைகள் பல்வேறு வழிமுறைகளை கையாண்டுள்ளனர். அரசியல் ரீதியாகவோ மதபீடங்களைக் கொண்டோ, அல்லது நீதிதுறையினைக்கொண்டோ நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். முன்னெடுக்கப்பட்ட பல தீர்வு முயற்சிகளை சீர்குலைத்துள்ளனர். அதனடிப்படையில் தான் பொதுக்கட்டமைப்பிலும் நிலைமைகள் அமைந்துள்ளது.

ஆகவே பொதுக்கட்டமைப்பு என்பது ஒருமனிதாபிமான நெருக்கடிக்கு உதவும் ஒரு சாதாரண கட்டமைப்பு, பேரனத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கான சாதாரண கட்டமைப்பையே ஆட்டம் காணச்செய்துள்ளனர். சிறிலங்கா நீதித்துறையே இவ்வாறான முடிவை எடுத்ததன் தொடர்பில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தமிழ் மக்களுக்கு நீதிவழங்குவதில் சிறிலங்கா நீதித்துறை கடந்த காலங்களில் விரோதமாகவே செயற்பட்டு வந்துள்ளது. அண்மைக் காலத்தில் கூட தமிழ் மக்கள் சிறிலங்கா சிறையிலேயே வைத்துபடுகொலை செய்யப்பட்ட போதும் படுகொலை செய்தவர்கள் நீதியின் முன்னால் நிறுத்தப்பட்ட போதிலும் படுகொலை செய்தவர்களை பிழைசெய்யவில்லையெனக் கூறி விடுதலை செய்துள்ளனர். இதைவிடவும் வரலாற்று ரீதியாக பார்ப்போமானால் தமிழ் மக்களுக்கு எதிரான சட்டங்கள் கூட சிறிலங்காவில் ஏற்படுத்தப்பட்டு தமிழ் மக்கள் பெரும் அநீதிக்கு உட்படுத்தப்பட்ட வரலாறுகள் இருக்கின்றன. அந்த அடிப்படையில்தான் பொதுக்கட்டமைப்பு தொடர்பான தீர்ப்பையும் கருதவேண்டியுள்ளது.

கேள்வி :- கிழக்கு நிலைமைகள் எப்படியுள்ளது?

பதில் :- தென்தமிழீழத்தைப் பொறுத்தவரையில் அண்மையில் திருகோணமலையில் போராளிகள் படுகொலை செய்யப்பட்ட பின்னர் தமிழ்மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் வகையிலும், போர்ச் சூழலை உருவாக்கும் நோக்குடனும் சிறிலங்கா படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டு செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. ஏதாவது ஒருவகையில் தமிழீழ விடுதலைப் புலிகளை போருக்குள் தள்ளிவிடும் ஒரு போக்கைத்தான் சிறிலங்கா படைத்தரப்பு செய்து வருகிறது. இதிலும் குறிப்பாக தென்தமிழீழத்தில்தான் இவ்வாறான நிலைமைகள் உள்ளன. போராளிகளுக்கான அச்சுறுத்தல் கூடுதலாக உள்ளது போர் நிறுத்த உடன்பாட்டின்படி நிராயுதபாணிகளாகத்தான் போராளிகள் அரசியல் பணியை செய்ய வேண்டியுள்ளது. இந் நிலையில் போராளிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அரசபடைகள் நிழல் யுத்தம் ஒன்றினை தீவிரமாக்கியுள்ளது என்பதைத்தான் கூறமுடியும்.

கேள்வி :- போக்குவரவு ஒழுங்குகள் தவிர மற்றவிடயங்களில் எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்?

பதில் :- போர்நிறுத்த உடன்பாட்டையும், அமைதி முயற்சிகளையும் பொறுத்தவரையில் முயற்சிகளை குழப்பிக் கொண்டு முறித்துக்கொண்டு செல்ல எமது தலைப்பீடம் விரும்பாது தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பொறுத்தவரையில் அமைதி வழியில் தீர்வுகளுக்கான முயற்சிகளை முயன்றுபார்திருக்கின்றோம். கடந்த மூன்றரை ஆண்டுகளாக தீவிரமாக ஈடுபட்டுள்ளோம். எமது தலைவர் பொறுமையையும் விட்டுக்கொடுப்பையும் செய்துள்ளார். சமாதான சூழலில் தான் பல தளபதிகளையும் போராளிகளையும் மக்களையும் இழந்து இருக்கிறோம். நீண்டதொரு பொறுமையை காத்திருக்கிறோம். ஆனால் தற்போது நிலைமைகள் மோசமாக்கப்பட்டுள்ளது. போராளிகளது பயணங்கள் முடக்கப்பட்டு நிழல் யுத்தம் தீவிரமாக்கப்பட்டுள்ளது. இராணுவ கட்டுப்பாட்டு பகுதிகளில் இராணுவமும் ஆயுதக் குழுக்களும் போராளிகளை படுகொலை செய்தவண்ணமுள்ளன. இந் நிலைமைகளை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்தார்.

(த)

## நோர்வே...

தாக்குதல் சம்பவம் அதனையடுத்து திருகோணமலையில் நிலவும் நெருக்கடிகள் மற்றும் பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பையடுத்து எழுந்துள்ள நிலைமைகள் குறித்து இரு தரப்புடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் இலங்கைக்கான நோர்வேத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-8)

# சமாதானப் பேச்சுவார்த்தையின்...

இந் நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலமாக தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்படலாம் என்பதில் நாங்கள் எல்லோரும் நம்பிக்கை இழக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம்.

இது தொடர்பாக மக்கள் சகல விடயங்களையும் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் நாங்கள் மக்களிடத்தில் பிரசாரம் செய்ய இருக்கின்றோம்.

எல்லா மக்களுக்கும் நிகழ்வுகள் புரியாமல் இருக்கலாம். மக்கள் அனைவரும் உண்மையை அறிய வேண்டும். மக்களும் தங்களுடைய எதிர்ப்புக்களை, தங்களுடைய அதிருப்திகள்ளை தெரிவிக்கக்கூடிய வகையில் சகல விடயங்களையும் புரிந்துகொள்ள வேண்டும் என்றார்.

இவ் விடயம் குறித்து சர்வதேச சமூகத்தினருக்கும் விளக்கங்களை கொடுக்க உள்ளோம். அவர்களுக்கு நிலைமை தெரியாமல் இல்லை. இருப்பினும் தற்போதைய அரசியல் நிலைமைகளால் பாரதூரமான விளைவுகள் ஏற்படக்கூடும் என்பதை சுட்டிக் காட்ட உள்ளோம்.

ஒரு சமாதானத்தை முன்னெடுப்பது என்ற அடிப்படையில் யுத்த நிறுத்தத்தினை ஏற்படுத்திய பின் ஒரு நாடு- ஒரு அரசாங்கம் மூன்றரை வருடமாக அதனை முன்னெடுப்பதற்கு ஆக்கபூர்வமாக எதனையும் செய்யமுடியாது இருக்குமாக இருந்தால் அதனைப் பற்றி நாங்கள் சர்வதேச சமூகத்திற்கு விளக்கம் கொடுக்க வேண்டியதொரு கடமைப்பாடு இருக்கின்றது. அந்த விளக்கத்தை நாங்கள் நிச்சயமாக கொடுப்போம்.

பொதுக்கட்டமைப்பு என்பது தற்போது உயிரிழந்து போய் உள்ளது. அது தொடர்பாக பேசுவதில் எதுவிதமான பிரயோசனமும் இல்லை.

திருமலை உள்ளிட்ட பல மாவட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. கடைசியாக புலிகள் மீதான தாக்குதல் திருகோணமலையில்தான் நடத்தப்பட்டுள்ளது. திருகோணமலையைப் பொறுத்தவரை அது தமிழர் தாயகத்தின் ஒருபகுதியே என இரா. சம்பந்தன் மேலும் கூறினார்.

(ச)

## மோட்டார்...

தம்பையா தேவகுமார் (வயது 24) என்ற இளைஞனே மரணமானவராவார். இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(ச-19)

# மன்னார் கடலில் படகிலிருந்து...

ஒன்றில் கொண்டுவரப்பட்ட நிலையில் இந்தக் கிளைமோர்க் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டன.

இதன்போது 16 கிளைமோர்க் குண்டுகள் மற்றும் குண்டு தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்களை கையடக்கத் தொலைபேசிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கிளைமோர்க் குண்டுகள் கைப்பற்றியதையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் ஏழு பேர் கைது செய்யப்பட்டனர். இருவர் தப்பியோடியுள்ளனர். கைது செய்யப்பட்ட ஏழு பேரையும் பொலிஸார் நீதிமன்றில் ஆஜர் செய்தபோது மன்னார் மாவட்ட பதில் நீதிவான் எம்.எம்.பாருக், அவர்களை எதிர்வரும் 29 ஆம் திகதிவரை அநுராபுர சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை இச் சம்பவத்தையடுத்து மன்னார் நகர் மற்றும் புறநகர்ப் பகுதியில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக மன்னார்ப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

(ச-8)











## பதவி வெற்றிடம்

* கணனி பக்க அமைப்பாளர்கள்
(ஆண்கள் இரவுக்கடமை)
* பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
(பெண்கள் பகல் கடமை)

வலம்புரி நிறுவனத்திற்கு 6கிலோமீற்றர் தூரத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டும் பிற்பகல் 3.30மணிக்கு சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில்வரவும்.

ஆளணி முகாமையாளர்
வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.